# தென்மொழி


## ஏறுநடை போட்டு நட!

ஏறு நடை போட்டு நட!
எக்காளம் ஊதி நட!
வீறு தமிழ்த் தாயின் புகழ் எண்ணி—அவள்
விடுதலைக்கே சூளுரைகள் பண்ணி! (—ஏறு)

கூறுபட்டு நின்றவரைக் கூட்டி நட! ஊட்டி நட!
கொள்கையினைப் போற்றி நட ஊக்கி!—வெற்றிக்
கொடியினை நீ தோள்களிலே தூக்கி! (—ஏறு)

மாறுபட்ட ஆட்சிக்கு நீ மண்டியிட்டுச் சாய்வதோ!
மற்றவர்கள் வாழ்கையில் நீ உண்டியின்றிக் காய்வதோ?
வேறுபட்ட மக்களின்முன் கூறுபட்டுப் போயினை;
வெற்றிபெற நீ வணங்கு பண்டைத் தமிழ்த் தாயினை! (—ஏறு)

உன்றன்மொழி நாகரிகம் பண்பாடெல்லாம் காற்றிலே
ஊமைமொழி, கோணல்நடை ஊன்றிவிட்டாய் நாட்டிலே
வென்றவன் நீ; தோற்றுவிட்டாய்; ஆரியர்பொய்ப் பாட்டிலே!
வெற்றி கொள்ள நீ எழடா செந்தமிழ் மெய்ப் பாட்டிலே!
(—ஏறு)

(தொடர்ச்சி 7-ஆம் பக்கம் பார்க்க)




சுவடி : 16. ஆசிரியர் விலை.
ஓலை : 2. பெருஞ்சித்திரனார் உருபா. 1

# நமக்கு வந்த மடல்கள்.

**0:667 :** பெருமதிப்பிற்குரியீர், வணக்கம்; தாங்கள் நலமுடன் வாழ, எல்லாம் பெற, இறைவனை வேண்டுகிறேன். இத் திங்கள் தென்மொழி இதழ் கண்டேன். கொள்கை முரசத்தின் ஒலி கூடியிருப்பது கண்டு மனம் மகிழ்ந்தேன். ஆசிரியவுரைக்கு மறுப்புச் சொல்ல எவராலும் இயலாது. தனித் தமிழ் இயக்கக் கொள்கைகளை வெறி என்று கூறும் புல்லுருவிகளுக்கு சாட்டையடிபோல் அமைந்தது அன்பர் செகந்நாதனின் மனக் கொதிப்புக் கட்டுரை. இத்துணைக் கொள்கைப் பற்று உள்ளவர் உள்ளவரை தனித் தமிழியக்கத்தினை எந்த ஆரியக் கூட்டத்தாலும் அழிக்க இயலாது. தமிழின் தலைவர் முதல்வர் பாவாணர் என்று உரைத்த தங்களின் கருத்து தலையாயது. தென்மொழியின் விலையினை உயர்த்தி, சேலம் முத்தமிழ்க் கூடல் அன்பர்களின் விருப்பப்படி வினு விடைப் பகுதியினைத் தொடங்கித் தனித் தமிழினை மேலும் சிறந்திலங்கச் செய்திடல் வேண்டும். நன்றி, வணக்கம்.

—**மு. பழ. சதாசிவம்**, பெங்களூர்-54.

**0:668 :** தனித் தமிழ்க் காவலரே, **'வெட்கங் கெட்ட தமிழர்கள்!''** என்ற தலைப்பின் கீழ் தாங்கள் தீட்டியிருந்த ஆசிரியவுரை கண்டு உளமார மகிழ்ந்தேன். தாங்கள் அரசியல் என்ற சாய்க்கடைப் பக்கம் செல்லாத தனித் தமிழ்க் காவலன் என்பதற்கு இக் கட்டுரை ஒன்றே போதுமானது. வெட்கங்கெட்ட தமிழர்கள் நடத்தும் பொய்யுரைகளையும் போலித்தனங்களையும் படம் பிடித்துக் காட்டியுள்ளீர்கள். தமிழனைக் கெடுப்பவன் தமிழன்தான என்பதையும் விளங்க வைத்துள்ளீர்கள். வெட்கங்கெட்ட தமிழனை நல்வழிப்படுத்த தங்கள் ஒருவரால்தான் முடியும். தாழ்ந்து கிடப்பவனைத் தலை நிமிரச் செயயும் தனித் தமிழ் ஆசான் தாங்கள் ஒருவரே. தாங்களே அவர்கட்கு வழி காட்டுங்கள். தங்கள் அன்பன்,

—**க. கண்ணன்**, தானக்குடி, திருமங்கலம், (திருச்சி)

**0:669 :** பேரன்பு சான்ற தனித்தமிழ்ச் சான்றீர்! முத்தமிழ் வணக்கம். யான் கடந்த ஓராண்டுக் காலமாகத் **'தென்மொழி'**, **'தமிழ்ச்சிட்டு'** ஆகிய இதழ்களைப் படித்து வருகின்றேன். தமிழின் தனித்தன்மையைக் கெடுக்கவேண்டும் என்ற நோக்கத்தில் கழிசடை இதழ்களை வெளியிட்டு வரும் சோற்றுப் பிண்டங்கள் நடுவில், தாங்கள் தனித்தமிழில் 'தென்மொழி', 'தமிழ்ச்சிட்டு' ஆகிய இதழ்களை நடத்தி வருவதைக் கண்டு பெருமகிழ்வு அடைகின்றேன். 'தென்மொழி' வழி, தமிழரின் உண்மையான வரலாற்றையும், தனித் தமிழின் மாண்பினையும், தமிழகத்தின் உண்மையான நிலையையும் அறிய முடிகிறது.

எவர்க்கும் அஞ்சாது, பாராட்ட வேண்டிய இடத்தில் பாராட்டியும் கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்தும் எழுதிவரும் தங்களின் நடுநிலைமை எல்லாராலும் பின்பற்றத்தக்கதாகும்.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!



சுவடி: 6 ஓலை 2.
[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]
கன்னி. தி. பி. ௨௰௧௰-
செப்-ஆக 1979.

# தென்மொழி

இலக்கிய இதழ்

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்.

ஆசிரியர்: மா. பூங்குன்றன். அறி.இ; க.மு;

புரப்பாசிரியர்கள்

தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)

தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)

கலைக்கோயில் மாணிக்கம் (சிங்கை)

தென்மொழி. ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்.

[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும், பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன']

# அரசியல் குழப்பங்கள்



"எல்லா நிகழ்ச்சிகளும் திடீர் திடீர் என்று நடந்து வருகின்றன. இது சரி, இது தவறு என்று நினைத்துப் பார்ப்பதற்குள், சரி என்று நினைத்தது தவறு என்று ஆகி விடுகிறது; தவறு என்று நினைத்தது சரி என்று ஆகிவிடுகிறது! எங்கே கால், எங்கே தலை என்று தேடிக் கண்டுபிடிப்பதற்குள், கால், தலையாகி விடுகிறது? தலை, காலாகி விடுகிறது. அப்பப்பா! எத்தனை மாற்றங்கள்! எத்தனை விரைந்த சுழற்சிகள்; சூழ்ச்சிகள்! தீர்மானிப்பு என்பதே இல்லாதபடி, எதிர் பார்ப்பு என்பதே விளங்காதபடி, ஓர்மை (ஊகிப்பு) என்பதே உணர்வுக்கு வராதபடி, இத்தனைக் குழப்பங்களா? கொள்கை மாற்றங்களா? போட்டி பொருமைகளா? பதவிப் போராட்டங்களா? இந்த

நிலைகள், இழிவுகள், சிக்கல்கள் என்னும் அரசியல் சூறுவளிகளில் சிக்கித் தவிக்கும், மூச்சு முட்டும் இந்நாட்டு மக்களைக் காப்பாற்ற ஒருவரும் இல்லையா? இனி, உய்யவே மாட்டோமா நாம்! உயரவே மாட்டானு தமிழன்!'' இப்படியெல்லாம் எண்ணிப் பார்த்து ஏக்க முறுகிறது, மனம்! கருதிப் பார்த்துக் கலக்க முறுகிறது, அறிவு! என்ன செய்வது? இந்த நாட்டு—இந்திய நாட்டு—தமிழ் நாட்டு அரசியல் நிலைகள் அப்படித்தாமே உள்ளன.

மொரார்சி தேசாய் இத்துணை விரைவில் அடிநிலைக்கும் அடியில் குப்புற வீழ்த்தப்படுவார் என்பதை நம்மில் எவரேனும் கணிக்க முடிந்ததா? சரண்சிங் இத்துணை விரைவில், முடிநிலைக்கும் முடியில் ஏறிக் குந்திக் கொள்வார் என்பதை எவரேனும் கருத முடிந்ததா? இனி தமிழகத்தைப் பொறுத்த அளவில் 'தி. மு. க. வும் அ. தி. மு. க. வும் இணைகின்றன' என்று கொட்டை கொட்டையான எழுத்துகளில் செய்திகள் வெளியாகும்; மக்கள் திகைப்படைவர் என்று எவராகிலும் கண்டோமா? இனி, அந்தத் திகைப்பு மாறுவ தற்குள், மீண்டும் இவ்விரண்டு கட்சிகளும் இப்படி ஏறுமாருக வேறு வேறு திசைகளில் முகங்களை வைத்துக் கொள்வார்கள் என்பதை எவரேனும் தீர்மானிக்க முடிந்ததா? இல்லவே, இல்லை. ஆனுல் எல்லாம் ஒரு நொடிப்பொழுதில் நடந்து விட்டன. செய்தியாளர்கள் படாத பாடுபட்டு விட்டனர்; மக்கள் திசைக்குத் திசை, முகத்துக்கு முகம் வெருட்சியடைந்து விக்கித் தவித்து விட்டனர். நடக்க முடியும் என்றது நடக்காமற் போய்விட்டது; நடக்க முடியாதது என்றது நடந்து விட்டது. நாம் வாழுவது அரசியல் உலகம். திரைப்பட ஊழி! எனவே செயல்களும் செய்திகளும் நொடிக்கு நொடி, காட்சிக்குக் காட்சி திகைப்படையச் செய்வனவாகவே இருக்கும்; திகில் ஊட்டுவனவாகவே இருக்கும்! நாம் மருட்சியடைந்து விடக்கூடாது! மயக்கமுற்று விடக்கூடாது. இதுதான் அரசியல்! இதற்குப் பெயர் தான் குடியரசு! இப்படித்தான் இனி எதிர்காலம் இருக்கும். நாம் தாம் அதற்குப் பக்குவப்பட்டுக் கொள்ள வேண்டுமே தவிர, அதற்குத் தக நடந்து கொள்ள வேண்டுமே தவிர, என்ன நடந்தது, என்ன நடக்கப் போகிறது என்பதைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொள்ளக் கூடாது; கருத்தறிவித்து விட முடியாது! அரசியல் அத்துணையளவுக்கு மக்களின் நடைமுறை மூளை நினைவோட்டத் திற்கும் அப்பால் நெடுந் தொலைவு தாண்டிப் போய் விட்டது; நீண்டு அகன்ற பாழ்வெளிக்குள் நடைபோடத் தொடங்கி விட்டது. இனி, ஒன்றென்பதும் இரண்டென்பதும் இல்லை; ஒன்றும் இரண்டுதான்; இரண்டும் ஒன்றுதான்! ஒன்று இரண்டாகலாம்; இரண்டு மூன்ருக லாம்; மூன்று ஐந்தாகலாம்; ஐந்து ஒன்ருகலாம்! அரசியல் என்பது சூதாட்டமே என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்து கொள்ளப்பட்டு விட்டது! மக்கள் அதில் காய்கள்! காய்கள் அலைக்கழிக்கப்படு

கின்றன. ஆட்டக்காரர்கள் மாறலாம்; ஆட்டங்கள் மாறலாம் காய்கள் தொடர்ந்து அலைக்கழிக்கப்படுவது நிறுத்தப்படாது! காலம் அப்படி மாறிவிட்டது. இப்பொழுதுதான் தொன்மங்களில் கூறியிருக்கும் கலியூழி (கலியுலகம்) சரியாகத் தன் ஆட்சியை நிலை நாட்டிக் கொண்டிருக்கின்றது. எந்தத் திசையில் எந்த முகம் திரும்புமோ, திருப்பப்படுமோ, எவரும் சொல்ல முடியாது; சொல்லி விடவும் கூடாது; சொன்னாலும் நம்பக் கூடாது; நம்பினாலும் நடந்து விடக் கூடாது; நடந்தாலும் நாமும் மீண்டும் மாறிக் கொண்டுவிட வேண்டும்! ஏனெனில் உலகமே அப்படி! காலமே அப்படி! அறிவுக்கு இலக்கணமே அப்படியாகி விட்டது. ‘உலகமே நாடகம்; நாம் எல்லாருமே அதில் நடிகர்கள்!’—என்ற கருத்துரை—தீர்மானிப்பு எத்துணை உண்மையாகி விட்டது! பின்னர், நடிகர்களாகிய நமக்கு உண்மை எதற்கு? அறம் எதற்கு? உறவாட்டந்தான் எதற்கு? இன்றைக்கு அரசனாய்ச் சுவடித்துக் கொண்டவர் நாளை ஆண்டியாய்க் கோலங் கட்ட வேண்டியிருக்கும்! இன்றைக்கு அமைச்சராய் இருப்பவர் நாளைக்குக் காவலனாய் இடம் மாற வேண்டியிருக்கும். இவற்றுள் எந்தப் புனைவை நம்பி, எவரை, என்ன பெயரிட்டு அழைப்பது? எனவே, காலத்திற்குத் தக்கபடி, கோலத்திற்குத் தக்கபடி, கோலத்தின் வேகத்திற்குத் தக்கபடி நாமும் கருத்து மாற்றம் செய்து கொள்ளத்தான் வேண்டுமா? அப்பொழுதுதான் இந்தக் குளறுபடிகளிலிருந்தெல்லாம் நமக்குப் பித்துப் பிடிக்காமல் இருக்குமா? குருதிக் கொப்பளிப்பு நேராமல் இருக்குமா?

நாம் இனி அரசியலில் தலைசாய்த்துப் படுக்கக் கூடாது; அதன் பக்கமே முகந் திரும்பிப் பார்க்கக் கூடாது. ‘குடியரசு நாட்டில் இது நடக்கவே நடக்காது; நடந்து விடவும் கூடாது’ என்று சிலர் சொல்வார்களானால், அரசியலைத் தேர்தல் நேரத்தில் மட்டுந்தான்—அதுவும் நாம் தேர்தல் சாவடி சென்று ஒப்போலை போடும் போது மட்டுந்தான்—நினைத்துப் பார்க்க வேண்டும். அப்பொழுதில்—அவ்விடத்தில் நமக்கு என்ன தோன்றுகிறதோ, அதற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளல் வேண்டும். அதற்கு முன்னோ, பின்னோ அரசியல் பேசக் கூடாது; பேசி விடவே கூடாது! வாயை மூடிக்கொண்டு கிடக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் அமைதியாக வாழ முடியும்! மனைவி மக்களுடன் பேச முடியும்; ஊரார், உற்றாருடன் உறவாட முடியும்; ஒன்றுபட்டு மகிழ முடியும். இல்லாவிட்டால் அரசியல் தலைவர்களுக்கு, தொண்டர்களுக்கு, செய்தித்தாள் காரர்களுக்கு வரும் மன நோய்களும், பதவி வலிப்புகளும், வெற்றி தோல்விக் கோணங்கிக் கொணசில்களும் நமக்கும் வரும்; நாமும் அமைதியாகவே வாழ முடியாதபடி செய்யும்! இதுதான் நாம் கடந்த நாட்களில் மிக அண்மையான காலங்களில் கற்றுக் கொண்ட பாடம்! தெரிந்து கொண்ட ஓகம்! இதையே நாம் உங்

களுக்கும் சொல்லி வைக்கின்றோம். கேட்டால் கேளுங்கள்; விட்டால் விடுங்கள்!

உலகமா அரசியல் விரகியை, இக்கால அல்லியை, திருவாட்டி இந்திரா காந்தி **அம்மையை,** நாமெல்லாம் வணங்கிப் போற்றிப் புகழும் அளவிற்கு, நமக்குக் கால நேரம் வந்திருக்கிறது; கட்டளை பிறந்திருக்கிறது. தனிப்பட்ட ஒரு தலைவன் தன்னைப் பின்பற்றும் ஏழைத் தொண்டர்களை, பத்திலக்கம் பேர்களை எப்படியெல்லாம் ஆட்டி வைக்கலாம்; எப்படியெல்லாம் முகந் திருப்பிப் பேச வைக்கலாம் என்பதற்கு இதைவிட நல்ல எடுத்துக்காட்டு கிடைப்பது அரிது. காலம் அவர்களை இத்தனை இக்கட்டுகளுக்கு உள்ளாக்கி விட்டது. நல்லவர்கள் நடுங்குகின்றனர்; வல்லவர்கள் நயன்மை பேசுகின்றனர்; விரகர்கள் தந்திரம் சூழ்கின்றனர்; பேச்சாளர்கள் தங்கள் நாக்குகளை உரித்துக் கொள்கின்றனர்! ஆடாத ஆட்டங்கள் ஆடிக் காட்டப் பெறுகின்றன; போடாத புனைவுகள் போட்டுக் காட்டப் பெறுகின்றன; ஏடாகூடங்கள் பேசப் பெறுகின்றன; எத்துகள் மேடை யேறி முழங்குகின்றன. கைகள் காசுகளை எண்ணிக் கரவுகள் எழுதுகின்றன; வரவுகளை நினைந்து வாய்கள் வாழ்த்துப் பாடுகின்றன. இத்தனைக்கும் வருவன பத்தே இடங்கள்! பத்தே பத்துப் பதவிகள்! அவற்றுக்காகப் பொய்யாகப் புனைந்து கொண்ட கோலங்கள் இவை! மெய்யாகப் பாடிக் காட்டும் ஓலங்கள் இவை! திருவாரூர் தேர் தில்லி நோக்கிப் புறப்பட்டு விட்டது; திசை திரும்பி விட்டனர் மக்கள்! தேசியம் முழங்குகிறது; ஒருமைப்பாடு இசைக்கப் பெறுகின்றது; ஒற்றுமை உலாக்கள் பாடப் பெறுகின்றன. ஒண்டிக்காரன், நம்மால் என்ன செய்ய முடியும்? வரலாறு பேச முடியுமா? வாய்மையைச் சுட்டிக் காட்ட முடியுமா?

சுழித்தோடும் காட்டு வெள்ளம் கங்கு கரையின்றிப் புரள்கிறது. கரைபுரண்டோடும் அவ்வரசியல் வெள்ளத்துள் அனைவரும் அடித்துச் செல்லப்படுகிறோம். கிழக்கு எது? மேற்கு எது? எதுவும் தெரியவில்லை நமக்கு? என்ன செய்ய வேண்டும்? எது செய்யக் கூடாது? ஒன்றுந் தெரியவில்லை நமக்கு? ஓயாத பேரிரைச்சல்! ஒழியாத வெள்ளக்காடு! வெள்ளச் சுழற்சியில் சிக்கித் திக்கு முக்காடிப் போகிறோம், நாம்! நமக்கு அரசியல் தெரியவில்லை; அறங்கள் தெரியவில்லை; ஆளுமையின் ஆழங்கள் புலப்படவில்லை. இந்நிலையில் எங்கே நாம் தப்புவது? எப்படித் தப்புவது? நல்லவர்கள் யார்? கெட்டவர்கள் யார்? ஒன்றும் புரிவதில்லை நமக்கு!

நாம் நினைப்பது, தமிழ், தமிழினம் எவ்வாறேனும் தப்ப வேண்டும்; தப்பிக் கரையேற வேண்டும்; கரையேறி முன்னேற வேண்டும் என்னும் தணியாத ஆவல் நிறைவேற வேண்டும் என்பது. அதனடிப்படையில் வரும் தவிப்பு, நமக்கு. ஆனால்

நடப்பது நாடகம்! நலிந்து போன ஒரு பழம் பேரினத்தின் தளராத முயற்சி வெற்றி பெறுமா என்னும் ஏக்கம் இந்நாடகத்தைப் பார்க்கையில் நமக்குத் தோன்றுகிறது. பெரியார் நூற்றாண்டின் நிறைவு விழா அண்மையில் கொண்டாடப்பெற்றது. அண்ணாவின் பிறந்த நாள் விழாவும் அத்துடன் சேர்த்துக் கொண்டாடப் பெற்றது. போட்டி போட்டுக்கொண்டு பெரியார் சிலைகளும் அண்ணாவின் சிலைகளும் மாலைகளைப் போட்டுக் கொண்டன. வேறென்ன வேண்டும் நமக்கு? விழாக்கள்தாம் வேண்டும்! பெரியாரின் கருத்துகள் அண்ணாவின் கொள்கைகள் செயல்படுத்தப் பெறுவனவாக முழங்கப் பெறுகின்றன மக்கள் நம்புகிறார்கள். போதாவா தமிழர் முன்னேற்றம்?

நாலரைக் கோடி தமிழர்கள் வாழும் நாடு இது. உலகெங்கணும் 13 கோடி தமிழினம் சிதறிக் கிடக்கின்றது. அங்கங்கு அடிமை நிலை வலுக்கிறது. முன்னொரு நாளில், நிறைவில்லாத அரைகுறை மனத்தோடு, பிரிந்து செல்லப் பெற்ற இத்தமிழ் நிலம், என்றைக் கேனும் நல்விளைவு பெற்றுத் தங்களை யெல்லாம் அழைத்துக் கொள்ளாதா என்று ஏங்குகிறார்கள், அவர்கள். நாம் இங்குப் பட்டம் பதவிகளுக்காக, நாளுக்கு நாள், பொழுதைக்குப் பொழுது நம்மையே பகைத்துக் கொண்டு கிடக்கின்றோம். பகைவர்களையே நம்பித் திரிகின்றோம். இந்நிலையில் ஏற்கனவே, இங்குள்ள தமிழர்கள் ஒரு சிலரின் உள்ளங்களில் இடையில் பூத்த இனவுரிமை மொட்டுகள் கருகுகின்றன. விடுதலை முணுமுணுப்புகள் உள்ளடங்கிப் போகின்றன. பெரியாரும் அண்ணாவும் பாவேந்தரும் மூட்டிய இனவுணர்வுக் கனல்கள் அவிந்து கொண்டுள்ளன. நமக்கு வழிகாட்டிகளாக உள்ள அரசியல் தலைவர்களின் பதவிப் பூசல்கள், போராட்டங்கள் நம்மிடையில் உள்ள இள நெஞ்சங்களின் உரிமைத் தவிப்புகளில் ஏக்க இசையைக் கலந்து இசைக்கச் செய்கின்றன. அவர்களின் நம்பிக்கை நாளங்கள் வெடித்துப் போகின்றவாறு இங்கு வீசும் அரசியல் சூறாவளிகள் பேயாட்டம் ஆடுகின்றன. என்ன செய்வது நாம்? எப்படி, எதனை, யாருக்குச் சொல்வது? ஏற்கனவே சொன்னதைக் கேட்டு, தன்னம்பிக்கை முளைவிட்ட ஒரு சில நல்ல உள்ளங்களையும் எவ்வாறு நிலைநிறுத்துவது?

'தி. மு. க. தான் அண்ணாவைப் பின்பற்றுகிறது; அவர் கொள்கைகளைச் செயற்படுத்துகிறது' என்பது ஒரு குரல். 'இல்லை; அ. தி. மு. க. தான் அவரை வழிகாட்டியாக ஏற்கிறது; ஒப்புகிறது; செயலுக்குக் கொணர்கிறது' என்பது ஒரு குரல். ஆனால் உண்மையிலேயே அண்ணாவின் கொள்கை எது? ஆய்ந்து கொண்டிருக்கின்றோம், நாம்! இனி, அவருக்கும் முன்னோடியான பெரியாரை—அவரின் கருத்துகளைக் கூறு போடும் கட்சிகள் எத்தனை. இந்தச் சந்தடிகளின் சாக்கில், தங்கள் தங்கள் உள்ளங்களில் உள்ளூர ஊறிக் கிடக்கும் அரைகுறையான சீர்திருத்த

எண்ணங்களைச் செயல் வடிவுக்குக் கொண்டு வரும் நோக்கத்தோடு செய்யக்கூடாத செயல்களிலெல்லாம் கால் வைத்து வழுக்கிக் கொண்டுள்ளன சில முந்திரிக் கொட்டைகள். ஒட்டுமொத்தமான தமிழின முன்னேற்றத்துக்குச் சரியான அடிப்படை எது, என்பதி லேயே பல்லாயிரம் வேறுபாடுகள் நமக்கு. என்றைக்கு ஓரள வாகினும் ஒன்றுசேரப் போகிறோம், நாம்? என்றைக்கு நம் இனிய அரிய தமிழ் மொழியின் ஏற்றத்திற்கென முழு உழைப்பைப் கொடுக்கப் போகிறோம், நாம்? நம் நாட்டை என்றைக்கு முழு ஆளுமை அதிகாரமுள்ள, முழு உரிமையுள்ள இறைமையுள்ள நாடாகக் காணப் போகின்றோம், நாம்? என்றைக்கு இதுபற்றி யெல்லாம் மனந் திறந்து நமக்குள் நாம் பேசிக் கொள்ளப் போகிறோம்?

தன்னைக் கூரை உச்சியிலிருந்து கீழே புரட்டித்தள்ளிய அரசியல் அதிகாரப் பித்திச்சி ஒருத்தியின் கால்களில் இக்கால் விழுந்து கிடக்கிறோம். இதை அரசியல் தந்திரம் என்று தணிவதா? மந்திரம் என்று மகிழ்வதா? நம்மைக் கூறு கூறுகப் பிரித்தாளும் குமுகாய வல்லாற்றலை முறியடித்து விரட்ட உதவுமா, இக் கூட்டு? ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அரசியல் நிலையில் மிகவும் கீழ்மைப் பட்டுக் கிடக்கும் இவ்வினத்தின் முழு அடிமைத் தனத்தையும் குழி தோண்டிப் புதைக்க உதவுமா, இச் சேர்க்கை? நமக்கென இருந்த உலகம் புகழும் வியத்தகு பண்பாட்டை நாளுக்கு நாள் துளிதுளி யாக இழந்து கொண்டு வரும் அவல நிலையினை அறவே அகற்றத் துணை நிற்குமா, இக் கூடா நட்பு? யாரால் யாருக்கு நன்மை? யாரை நினைத்துக்கொண்டு யார், யாருடன் இணைவது? விட்டுப் பிரிந்த இன நட்பை விட, வீழ்த்திய பகைதான் இணைவுக்கு ஏற்ற இடமா? பகை வலுத்த பின், தான் ஒழிக்கக் கருதிய தன்னினத்த் வனையும், தன்னையும் ஒருங்கே வீழ்த்தும் எதிரியின் தீய கனவுக்கு இவ்விணைவு ஒருவேளை எங்கே இரையாகப் போய்விடுமோ என்று அஞ்சுகிறோம் நாம்!

வினை,பகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்.

—**பெருஞ்சித்திரனார்.**

---

## பெருஞ்சித்திரனார் பாடல்கள்
## ‘ கனிச்சாறு ’ வெளியீட்டு விழா

கனிச்சாறு வெளியீட்டு விழா வரும் **11-11-79**-இல் சென்னை யில் நடைபெற விருக்கிறது. பேரறிஞர்கள் பலர் கலந்து கொள் கின்றனர். அன்பர்கள் அனைவரும் வந்து கட்டாயம் கலந்து கொள்ளவும். முழு விளத்தம் அடுத்த இதழில்.

**நூல் வெளியீட்டுக் குழு,**
மே/பா. தென்மொழி, சென்னை-5.

(அட்டைப் பாடல் தொடர்ச்சி)

**வந்தவர்க்கு வால்பிடித்தாய்; கால்பிடித்தாய் கையிலே!**
**வாய்வலிக்க வாழ்த்திவிட்டாய்; வாழ்ந்துவிட்டார் பொய்யிலே;**
**சொந்தமொழி சொந்தஇனம் சொந்தநிலம் விட்டனை;**
**சோற்றுக்குநீ மண்டியிட்டு மானம், உயிர் கெட்டனை! (—ஏறு)**

**உலகமெல்லாம் உன் தமிழர் ஓடுகின்றார் வாழவே!**
**உன்நிலத்தை வேறுமக்கள் ஆளுகின்றார் சூழவே!**
**இலகு தமிழ்த் தாயையெண்ணி ஏற்றம்மிகக் கொள்ளடா!**
**இளைப்பதில்லை என்றவர்க்கு வாளில் விடை சொல்லடா! (—ஏறு)**

**பண்டைவரலாற்றையறி! உன் உரிமைத் தீயினைப்**
**பற்றவைத்தே வீசிடுவாய் நல்லடிமை நாயினை!**
**கண்டுநிகர் தாய்மொழியால் உன்னினத்தைப் பேணுவாய்!**
**காலம் வரும்; வெற்றி வரும்; வாழ்க்கை நலம் காணுவாய்! (ஏறு)**

**ஆரியர்தம் கொட்டமெலாம் அடங்கிவிடும் நாளிலே**
**ஆட்சி தமிழ்த் தாயின்கையில் வந்துவிடும் வாளிலே**
**நேரியஉன் கொள்கையினை நீமுழங்கிப் பாடடா!**
**நேற்றிழந்த உரிமைநலம் நாளைவரும்; கூடடா! (—ஏறு)**

---

(அட்டை 3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் மருத்துவக் கல்லூரிகளில் தமிழும் பயிற்றுமொழியாக உள்ளது. உலக நாடுகளில் தாய்மொழியே பயிற்றுமொழியாக உள்ளது. தமிழ்நாட்டில் மட்டும் இந்த உரிமை ஏன் மறுக்கப்பட வேண்டும்? மருத்துவம், பொறியியல் துறைகளில் முதலில் ஏராளமான பாட நூல்கள், பார்வை நூல்களை உருவாக்க மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திட்டம் தீட்டியுள்ளார். அரசும் இதற்குத் துணையாக உள்ளது. இம்முயற்சி வெற்றி பெற்றே தீரும். இதனை நாம் வரவேற்போமாக!

**கழுகுமலை. வை. பூ சோமசுந்தரம்**, க. மு; ப. இ., இல. இ.

0:671 : அன்பு சால்புடையீர்! இரு கை கூப்பிய வணக்கம். 'இரட்டை'த் திங்களிலே தங்களது ஆசிரியர் உரை எமக்கு மிகவும் பிடித்திருந்தது. கரணியம் போராட்டம் என்றிருந்த நிலை, வடவரின் நிலைச்சுட்டு, அரசியல்வாதிகளின் அறிவற்ற, மந்த கோணங்கி (கோமாளி) நிலை, அவர்களின் தில்லுமுல்லுகள் ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்த அமைச்சர் பெருமக்கள், மக்களைத் திக்குத் திருப்பக் கையாளும் முறை, புணவு போட்டவர்களின் வெட்ட வெளிச்சம், திரையுலகைப் படம் பிடித்துக் காட்டிய உண்மை முறை, தற்காலப் புலவரின் பாக்கள் இன்னும் பிறவும் மன வெம்பி வெளியிட்டுள்ளீர்கள். இது போன்ற ஆசிரிய உரை அதிக இடம் பெறல் வேண்டும். அப்பொழுதாவது தருக்கர், கிறுக்கர், தன்மானமிழந்தோர், உணர்விலா ஊமைகள், காதிருந்த செவிடர், கண்ணிழந்த கயவர் தமக்கு வழிகாட்டியாக அமையும்.

**— முடிமன்னன்**, அவிநாசி.

# அன்பர் சாலை இளந்திரையன் பார்வைக்கு !

தென்மொழியில் நாம் அன்பர் சாலை இளந்திரையன் அவர்களைப் பெயர் குறிப்பிடாமல் 'தில்லிப் பேராசிரியர்' என்று பதவி குறிப்பிட்டு எழுதிய சில **பொதுவான** கருத்துரைகளைப் படித்து விட்டு, அன்பர் இளந்திரையன் அவர்கள் அவரின் (1-979) 'அறிவியக்க' இதழில் சில 'அறிவுரைகளை' நமக்கு எழுதியுள்ளார். 'அறிவுரை' கூறவந்த இவர், நாம் ஏதோ இவர் புகழ்(!) பெறுவதைப் பொறுக்க மாட்டாமலும், இவர் தீவிர(!)மாகச் செயல்படுவதைக் கண்டு சாம்பிப் புகைந்தும், 'சிறுபிள்ளைத்தனமாக'வும், இவர் பற்றி ஏதோ 'கக்கி' யிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

முதலில் ஒருவரைப் பார்த்து ஒருவர் பொறாமைப்படுவதானால், முன்னுள்ளவர்க்குச் சில தகுதிகள் வேண்டும். அவ்வாறு நாம் பொறாமை கொள்வதாக இவர் தாமே நினைத்துப் பெருமிதப்பட்டுக் கொள்ளும் 'தகுதி' இவருக்கும் இல்லை; இவர் மேல் போய்ப் பொறாமை கொள்வதற்குரிய 'தேவை' நமக்கும் இல்லை. இனி, ஒருவர்மேல் பொறாமை கொள்ளும் உணர்வும் நமக்கில்லை. நாம் தென்மொழியில் இவர் பற்றி எழுதிய கருத்துகள் இவரின் தனிப்பட்ட வினைகளைச் சுட்டுவன அல்ல. இவர் தமிழ்ப் பேராசிரியராக இருந்து கொண்டு, தமிழின் பொருட்டுச் சம்பளம் வாங்கித் தின்று கொண்டு, வேண்டுமென்றே எல்லார்க்கும் (அஃதாவது இவர் மொழியில் இவரைப் பின்பற்றும் **பாமரர்க்கும்**) புரியும் என்று அளவிறந்த கலப்புத் தமிழில் எழுதியும் பேசியும் தமிழ்க் கொலை செய்து வருவதையும், தமிழ் மொழியில் தோன்றி உலகெலாம் போற்றிப் புகழப்பெறும் ஒரே நூலாகிய திருக்குறளைப் பழித்துப் பேசியதையும் கண்டித்தே நாம் சில கருத்துகளை எழுதவேண்டி வந்தது. (மற்றபடி தென்மொழி தொடங்கிய இருபது ஆண்டுகளில் இவரை நாம் எவ்விடத்தும் திரும்பியும் பார்த்ததில்லை; தீண்டவும் எண்ணியதில்லை.) அவ்வாறிருக்கையில், நாம் கூறிய இரண்டு குற்றச்சாட்டுகளுக்கும், நேரிடையாக ஒரு விடையும் தாராமல் தம் வாய்க்கு வந்தபடி 'பொறாமை', 'சிறுபிள்ளைத்தனம்', 'கக்கல்', 'புகைச்சல்' என்று இவர் பகுத்தறிவுத் தனத்துக்குத் தக்கபடியும், தனக்குள்ளது உலகிற்குமுண்டு என்று கருதும் மனவியலுக்கு ஏற்றபடியும், அவரைப் பார்த்து நாம் பொறாமை கொள்வதாகவும் புகைச்சல் கொள்வதாகவும், 'எகிறி' நம் மீது இடறி விழுந்திருக்கிறார். துஞ்சு புலி இடறிய சிதடன் போலச் சீண்டியிருக்கும் இவருக்கு நாம் சில விளக்கங்களைக் கொடுக்க வேண்டியது நம் கடனாகிறது.

முதற்கண் சாலை இளந்திரையன் நம்மைப் பற்றிய ஒரு கருத்தை நன்கு உணர்ந்து கொள்ளல் வேண்டும் இனத்தைப் பொறுத்த அளவில், அன்பர் சாலை இளந்திரையன் நம் உடலில் ஓடும்

குருதியின் குருதி! ஆனால் தமிழைப் பொறுத்த அளவில் 'பகுத்தறிவு' 'பொதுவுடைமை' என்றெல்லாம் கூறிக் கொண்டு, தமிழில் வேண்டுமென்றே பிறமொழிகளைக் கலந்தும், பிழையாகவும், பொறுப்பின்றியும் எழுதுவாரானால், நமக்குப் பார்ப்பானும் ஒன்றுதான்; அவரும் ஒன்றுதான். பார்ப்பான் தமிழுக்கு எதிரி என்ற முறையில் நம் தமிழ் மொழியைக் கெடுக்கின்றான்; இவர் தாம் அதற்குச் சொந்தம் என்னும் முறையில் அதைக் கெடுப்பதாக நாம் கருதுகின்றோம். எனவே, இந்த வகையிலன்றி அவர்க்கு நாமோ, நமக்கு அவரோ பகையுமில்லை; அவர் கூறுவதுபோல், ஒருவரோடு ஒருவர் மோதிக்கொள்ளும் தேவையுமில்லை. எனவே, அவரவர் வேலைகளைப் பார்த்துக்கொண்டு அவரவர் திசைகளில் அவரவர் போகலாம். ஆனால் இங்கு ஒன்றை அன்பர் சாலை இளந்திரையனும் அவரைச் சேர்ந்தவர்களும் எண்ணிப் பார்க்க வேண்டும். இன நிலையில் பார்ப்பனியத் தாக்குதலை வேறு பிரித்து உணர்ந்து கொண்டு, புறக்கணிக்கத் தெரிந்து கொண்ட நீங்கள், மொழிநிலையில் அத்தாக்குதலை வேண்டுமென்றே தவிர்க்க மறுப்பதும், மாறாகக் கைக்கொள்ளுவதும் எந்த நோக்கம் பற்றி என்பது தெரியவில்லை. ஒருவேளை உங்கள் 'பாமரத்'தனம் பற்றியிருக்கலாமோ என்று கருதவேண்டியிருக்கின்றது.

இனி, குமுகாயத்தை வளர்க்க முற்பட்டதால் தமக்குத் தமிழ் பற்றிக் கவலையில்லை என்கின்றார் இவர். கவலை இவர்க்கு இல்லாமல் இருக்கலாம். ஆனால் நமக்குண்டு. தமிழ் கற்ற தமிழ்ப் பேராசிரியர் ஒருவர், தமிழ்மொழியின் மேல் அக்கறையற்றுத் தமிழ் நலத்தைப் புறக்கணித்துக்கொண்டு, பிறர்க்குத் தவறான எடுத்துக் காட்டாக உள்ளதை நாம் பொறுத்துக்கொள்ளல் முடியாது. ('பகைவர்கள் **அல்லமே** நாம்' என்பதை, '**அல்லவே** நாம்' என்றும்' 'அது மட்டு **மன்று**' என்பதை 'அது மட்டு **மல்ல**' என்றும், 'இளைஞர்கள் **பலர்**' என்பதை பல இளைஞர்கள் என்றும், இன்னும் பலவாறும் இவர் எழுதும் இலக்கணப் பிழைகள் முதலியவற்றைக் கூட இவர் தமிழ்த்திறன்(!) கருதிப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் இவர் வேண்டுமென்றே செய்யும் தமிழ்க் கொலையை நாம் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. இது பற்றிப் போதுமான எடுத்துக் காட்டுகள் அவர் பற்றிய முன் கட்டுரையிலேயே கொடுத்திருக்கிறோம்.)

மேலும், இக்காலத்தில் ஒரு மளிகைக்கடை வைத்திருப்பவனும் கூட, தான் மக்கள் தொண்டு செய்யவே அக்கடை வைத்திருப்பதாகக் கூறிக்கொள்ள முடியும். இவர் கருத்துப்படி வேறு யாரும் மக்கள் தொண்டு செய்யவில்லை யென்றும், இவரே மக்கள் தொண்டு செய்வதாகவும் பொருளாகிறது. இவர் இந்த வகையில் தம் தகுதியை அளவிறந்து மதிப்பிட்டுக் கொள்ளட்டும்; நாம் மறுக்கவில்லை. ஆனால், மக்கள் தொண்டு செய்வதால், தமிழைக் கலப்பு

மொழியாகத்தான் எழுதுவேன், பேசுவேன் என்பதில் இவருக்கு, குறிப்பாகத் தமிழ்ப் பேராசிரியராக உள்ள இவருக்குத் தனி உரிமை உண்டு என்ருல், அதைச் சுட்டிக்காட்டுதற்கு நமக்கும் உரிமை உண்டு. அதை இவர் தடுக்க முடியாது.

இவர் தமிழ்ப் புறக்கணிப்பை நாம் சுட்டிக்காட்டியதைப் பொறுக்காமல், பாவாணர் மேல் இவர் கொண்ட பற்றையும் இவர் 'டாக்டர்' என்று போடாமல் 'முனைவர்' என்று போட்டுள்ளதையும், செ. சொ. பி.க்கு இவர் உறுப்பினரானதையும், தமிழ்ப் பெயர் ஏற்றதையும், எடுத்துக்காட்டி, 'இவர் தமிழுக்குப் பகைவரில்லை' என்று மறுத்திருக்கிருர் இவர் தொண்டர்களில் ஒருவர். பாவாணர் மேல் யாரும் பற்று வைக்கலாம். பற்று வைக்காமற் போனுலும் பிழையில்லை. ஆனுல் அப்படிப் பாவாணர் மேல் பற்றும் மதிப்பும் வைத்திருப்பதே தமிழைப் பிழைக்காத தன்மைக்குச் சான்ருகி விடாது. மேலும் இவர் போல் செ. சொ. பி.க்கு உதவியவர் நூற்றுக்கணக்கானவர். தமிழ்ப் பெயர் சூட்டிக்கொண்டவர்களோ, பல்லாயிரக்கணக்கானவர். அவற்ருலெல்லாம் என்ன பெருமையோ நமக்குத் தெரியவில்லை. இனி, 'டாக்டர்' என்பதற்கு 'முனைவர்' என்று பயன்படுத்துவதும் பொருத்தமில்லை. **முனைதல்** என்பதும் **முனிதல்** என்பதும் வெறுத்தல் என்னும் பொருளில் துறவைக் குறிக்கும் சொற்கள். முனைவன் - முனிவன்—உலகப் பற்றுகளை வெறுத்தவன், விட்டவன்—துறவி.

வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்.

—**தொல். பொரு-மர. 95**

—என்னும் நூற்பாவிலும், 'மருளறு தேர்ச்சி முனைவர்க்கும் அரிதே' (பரி: 1-33) என்னும் செய்யுளடியிலும்—'முனைவன்' துறவியைக் குறித்தது. இனி, இக்காலத்து முனைவன் என்பதற்கு முன்னிருப்பவன், முனைந்து பணியாற்றுபவன் என்று பொருள் படலாம். சரியான பொருளாகக் கொள்ள வேண்டுமானுல், **Foreman** என்பதற்கு முனைவன் என்று பயன்படுத்தலாம் என்பர் பாவாணர். ஆனுல் 'டாக்டர்' என்பதற்கு 'முனைவர்' என்று எவ்வாறு பொருள் கொள்ள முடியும்? தன்முனைப்புள்ளவர் வேண்டுமானுல், இன்னெருவர் அதுவும் பாவாணரின் 'பண்டாரகர்' என்னும் சொல் நமக்கெதற்கு, நாமுந்தாம் ஒரு சொல் கண்டுபிடிப்போமே என்ற கருத்தில் அச்சொல்லைக் கையாளலாம். அதனுல் கலப்புத் தமிழ் எழுதுவதையும் குறள் பழிப்பு வேலை செய்வதையும் சரியென்று சொல்லி விடலாமா?

இனி, **அறிவியக்கம்** என்று பெயரை வைத்துக்கொண்டதனுலேயே—அதற்கு இவர் தலைவராகவோ, அமைப்பாளராகவோ,

செயலராகவோ வழிகாட்டியாகவோ இருந்து விடுவதனுலேயே, இவர் மட்டுமே 'அறிவு' அனைத்தையும் கொள்முதல் செய்பவர், பிறரெல்லாரும் அறியாமையைக் கொள்முதல் செய்பவராக இவரும் இவர் போலியரும் கருதி விடல் கூடாது. இனி ஏதோ இவர்போல் பலர், பெரியார் போட்டுக் கொடுத்த தண்டவாளத்தில் வண்டி ஓட்டிக்கொண்டு, பகுத்தறிவு, புதுமை, புரட்சி, பொதுமை அறிவியல் என்றெல்லாம் பேசிக்கொண்டிருப்பதால் மட்டுமே தம்மைப் பெரிய பெரியாராகக் கருதிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் தம்மை எப்படி வேண்டுமானுலும் கருதிக்கொண்டு போகட்டும்; நமக்குக் கவலையில்லை. ஆனுல் மற்றவர்களை இவர்கள் அறிவிலும் பிறவற்றிலும் சிறியாராகக் கருதிக்கொண்டு அட, பண்பிலும் கூட குறைத்து மதிப்பிடுகின்ருர்களே, அதை நினைக்கும் பொழுதுதான் நமக்குக் கவலையாக மட்டுமில்லை; வியப்பாகவும் இருக்கிறது. ஒருபுறம் இரக்கமாகவும் இருக்கிறது. தங்களைப் பகுத்தறிவாளர் என்று கூறிக் கொள்பவர்களை ஒன்று வேண்டிக் கொள்கின்றேன். அருள் கனிந்து உங்களைத் தவிர, பிறர்க்கெல்லாம் பகுத்தறிவில்லை என்று கருதிவிட வேண்டாம். இறை மறுப்பு பகுத்தறிவாகாது. (இறைவன் உண்டா இல்லையா என்னும் ஆராய்ச்சி ஒருபுறம் இருக்கட்டும். இக்கால் நாம் அதில் ஈடுபடவேண்டா.) ஓர் எள் மூக்கத்துணையறிவும் இல்லாதவனும் இறைமையை மறுக்கலாம்; ஒரு பேரறிஞனும் இறைமையை மறுக்கலாம். இறைமையை உணர்வதும் அதனை மறுப்பதும் மனவுணர்வின் வேலை; அறிவின் வேலையன்று. அறிவு மலர் போன்றது; மனவுணர்வு அதன் மணம் போன்றது. உலகில் மணமில்லாத மலர்களும் உண்டு. ஆனுல், பகுத்தறிவு மலரின் இயக்கம் போன்றது பகுத்தறிவியக்கமற்ற ஒருவன் மாந்தனுகான். எனவே, எல்லார்க்கும் பொதுவான பகுத்தறிவையோ, அறிவையோ அல்லது வேறு எந்த மாந்த இயற்கைக் கூறையோ, தமக்கே 'உரியது' என்று சொந்தம் கொண்டாடுவதும், அவற்றின் பெயர்களை வைத்துக்கொண்டு இயக்கம் நடத்துவதும், பிறர்க்குள்ள மாந்தப் பெருமையை அவமதிக்கும் அல்லது மறுக்கும் அறிவுச் செருக்கான செயலாகும். இத்தகைய அறிவுணர்வைத்தான் திருவள்ளுவர் 'காரறிவு' என்று வேறு பிரித்துக் காட்டுவார்.

இனி, 'சாதி ஒழித்திடல் ஒன்று நல்ல தமிழ் வளர்த்தல் மற்றென்று' என்று, தமிழர்க்கு வேண்டிய இரு கடமைகளாகப் பாவேந்தர் சுட்டியதை, நாம் இவர்க்குக் காட்டியது, பாவேந்தர் கருத்தை இவர் போற்றுகின்ருர், மதிக்கின்ருர் என்பதற்காகத்தான். ஆனுல், அதற்காக அதே பாவேந்தரின் 'கடவுள் வெறி' சமயவெறி கன்னல் நிகர் தமிழுக்கு நோய் நோய் நோயே' என்ற அடியை இவர் நமக்குக் காட்டியது எதற்கு? பாவேந்தர் கூற்றுப்படி நாம் கடவுள் வெறியோ, சமய வெறியோ கொண்டு பேசியதாகவோ, எழுதிய

தாகவோ, நடந்ததாகவோ இவரால் காட்ட முடியுமா? மேலும், உணர்வு வேறு, வெறி வேறு என்பதைப் பகுத்தறிவு பேசுகின்ற இவர் நன்கு பகுத்து உணர்ந்து தெரிந்து கொள்ளுதல் வேண்டும். எதுவும் வெறியானால் அறிவையும் மறைக்கும்; மனத்தையும் மறைக்கும். எனவே அப்படிப்பட்ட வெறியுணர்வு, உள்ளவர்களால் (அஃது எப்படிப்பட்ட வெறியுணர்வானாலும், அஃது உள்ளவர்களால்) தமிழ் நலிந்து போகும்; நோயுறும்; என்பது பாவேந்தர் கருத்து. அஃது ஓரளவு உண்மையும் கூட. ஆனால் கடந்த இருப தாண்டுகளாக நாம் நடத்திவரும் தூய தமிழ் இதழ்களாலும், கடந்த முப்பது, முப்பத்தைந்து ஆண்டுகளாக நாம் எழுதி வரும் பாடல்களாலும், உரைகளாலும் தமிழ் நலிவுற்றதா, வலிவுற்றதா என்பதை நடுநிலை மனவுணர்வுள்ள உண்மைத் தமிழன்பர்களே அறிவர். எம் இறைமைப் பற்று எந்த இளந்திரையனையும் ஊறுபடுத்தவில்லையே. ஆனால் இளந்திரையனின் அறிவு வெறி, அல்லது அவர் கூறும் மக்கள் தொண்டு வெறி தமிழையன்றோ ஊறுபடுத்துகின்றது. எனவேதான் '**நல்ல தமிழ்**' வளர்த்தலும் 'தமிழினத்தை உயர்த்தும் ஒரு வழியாகப் பாவேந்தர் கூறுவதை, அந்தப் பாடற்பகுதியை எடுத்துக் காட்டி நாம் வலியுறுத்தியிருந்தோம். அதை மறுக்க வந்த இவர், 'அது தேவையில்லை' என்று கூறித் தம் கொள்கைக்கு வலிவு தேடுவதற்கு மாறாக, நமக்கு ஏதோ கடவுள் வெறி, சமய வெறி இருப்பதாகக் கருதி, 'அது தமிழுக்கு நோய்' என்று பாவேந்தர் கூறியிருக்கும் (ஏதோ இவர் கருத்துப்படி 'புத்தம் புதிய') மேற்கோளைச்சுட்டி, நம்மை எங்கோ ஒரு கோயில் வாயிற்படியில் விழுந்து புரளும் பித்தாண்டியாக உருவகித்துக் காட்டி அன்பர்களை மருட்டியிருக்கின்றார். பாவேந்தரை இளந்திரையனை விட நமக்கு நன்கு தெரியும். எனவே, பெரியாருக்கு இவர் சொந்தம் கொண்டாடுவதுபோல், பாவேந்தருக்கும் இவர் சொந்தம் கொண்டாட வேண்டா, எனவே, வெறுமனே கடவுளை மறுப்பதாகச் சொல்லிக்கொண்டு, தூய தமிழ் முன்னேற்றத்திற்குத் துணை போகாத, மாறாகத் தடையாக உள்ள இளந்திரையன் போன்றார் தமிழுக்கு நோயா, நாம் நோயா என்பதை உண்மைத் தமிழன்பர் உணர்ந்து கொள்வாராக. மேலும், தொடக்கத்தில், தீவிர இறை மறுப்பாளராக விருந்த தி. க.வினர், பொதுவுடைமையர் பலரும், அகவை முதிர முதிர தீவிர கடவுட் பற்றாளராக விருந்து கண்ட கண்ட தெய்வப் படிமங்களை யெல்லாம் நாடியதும், கோவில் குளங்களையெல்லாம் கும்பிட்டுத் தொழுவதும் நமக்குத் தெரியும். அனால் தமிழ்ப் பற்றுக்கும் அவர்களின் நடைமுறைக்கும் எவ்வகைத் தொடர்பும் முன்னோ பின்னோ என்றும் இருந்ததில்லை. எனவே, கடவுட் பற்றில்லாதவர்தாம் தமிழ்க்கு நலஞ்சேர்ப்பவர் என்று சாலையார் கூறுவதில் துளியும் உண்மையில்லை. அதற்கு அவரே தலையாய எடுத்துக் காட்டாகவும். உள்ளார். ஆகவே, ஒருபுடை உண்மையாகவும், தீவிர மத வெறி

யைத் தமிழில் புகுத்துவதைக் கண்டிக்கவும் கூறிய பாரதிதாசனர் கூற்றை, இளந்திரையன் நம் பொருட்டு எடுத்துக் காட்டுவது எள்ளளவும் பொருந்தாது என்பதை அறிவுடைய அனைவரும் ஒப்புவர். இவ்வகையில் சமயத்திற்கும் தமிழ் வளர்ச்சிக்கும் தொடர்பில்லாதது போலவே, இவர் கூறும் பகுத்தறிவுக்கும்(!) தமிழ் வளர்ச்சிக்கும் சற்றும் தொடர்பில்லை. ஆனால், ஒருண்மையை வெளிப்படையாகச் சொல்வதானல், தண்டமிழ் வளர்த்த பெரியார்களுள், அறிஞர்களுள், நூற்றுக்குத் தொண்ணூற்றென்பதின்பர் இறைப்பற்றுள்ளவராக இருப்பது வரலாறு. இதை மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

இனி, 'இவ்வளவு பணம் தந்தால்தான் நாம் வர முடியும்' என்று கூட்டம் ஏற்பாடு செய்கிறவர்களிடம் நாம் வற்புறுத்துவதாக இவர் கேள்விப்படுவதாகக் கூறியுள்ளார். நாம் இவர்க்குச் சொல்வோம். நம் நேரம் விலை மதிப்பற்றது என்பது ஒருபுறமிருக்கட்டும். இதைப் போய்க் கேள்விப்பட வேண்டிய தேவையே இல்லை. இது மறைமுகமானதன்று. மிக வெளிப்படையாக, வேண்டுகோள் வடிவில், மிக விளக்கமாகத் **தென்மொழி**யில் அறிவிக்கப் பெற்றிருக்கின்றது. அதில் அறிவிக்கப் பெற்ற தொகைக்கு மேல், தம் இடைவேட்டியில் முடிந்து கொண்டிருந்த எவரையும், 'அதனை அவிழ்த்துக் கொடும்' என்று நாம் வற்புறுத்தியதாகக் காட்ட முடியாது. 'கூட்டத் தொகையைக் கொடுக்கிறேன்' என்று கூறி, ஒப்புக்கொண்டு, இசைவு பெற்று, நாளுறுதி செய்து கொண்டு, கூட்டம் நடத்தி, நிகழ்ச்சி முடிந்த பின் ஊர் புறப்படும் பொழுது, சாலையிலும் சந்து சதுக்கத்திலும், உந்து வண்டி நிலையத்திலும் நம்மை நிறுத்தி வைத்துக்கொண்டு, பல்லைக் காட்டியும் கைகளைப் பிசைந்தும், பேரம் நடத்தியும், கழிவு கேட்டும் வாணிகம் பேசிய 'சாலை'த் தொண்டர்கள் கூட, நம்மை வேறு வழியில் பழித்துக் கூறியதை இளந்திரையன் எடுத்துக் காட்டிவிட முடியாது. இனி, இதற்கும், நாம் அவர் மேல் கூறிய 'தமிழ்ப் பழிப்புக்' குற்றச் சாட்டிற்கும், 'திருக்குறள் பழிப்புக்' கொடுமைக்கும் என்ன தொடர்பு உள்ளது? 'தமிழைப் பழித்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்' என்பதே நம் கொள்கை! அதுவன்றி, என்மேல் குற்றம் குறைகள் கூறி, என்னைப் பழித்ததற்காகவோ, பழிப்பதற்காகவோ எவரையும் இதுவரை என் தூவலுக்கு இரையாக்கியதில்லை என்பதை இளந்திரையன்கள் உணரட்டும். இனி, இளந்திரையனைப்போல் கணவன், மனைவி இருவராகவே இருந்தால், வருமானமும் இருந்தால், போகவர வண்டி ஏந்துமிருந்தால், 'ஓரேர் உழவன்' போலத் தமிழுழவு செய்யும் எம் கட்டுப்பாடுகளில் பலவற்றைக் குறைத்திருக்க முடியும். இன்னும் முடியுமானல் '**தென்மொழி**'யை மிகவும் விலை குறைத்தோ இலவயமாகவோ கூட மக்களுக்கு அச்சிட்டு வழங்கியிருக்க இயலும். ஆனல் நிலை அவ்வாறில்லையே. எனவே

தான், நிகழ்ச்சிக்கெம்மை அழைப்பவர்களுக்குத் தொகையுட்பட பலவகைக் கட்டுப்பாடுகளை நாம் வலியுறுத்த வேண்டியுள்ளது. மற்றபடி எந்தச் சந்தையில் எந்த மீனை விற்கலாம் என்பது இளந்திரையனைப்போல் நமக்குத் தெரியாது. இவ்விடத்தில் இன்னொன்றையும் நாம் கூறிக்கொள்ள விரும்புகிறோம். நாம் ஓராண்டுச் சிறையிலிருந்த பொழுது தமிழன்பர்கள் பலர் போலும், நம் அன்பர் இளந்திரையனும் நம் குடும்பத்திற்கு ஒருமுறை வேண்டியோ வேண்டாமலோ ஒரு நூறு உருபாயும், அதன்பின் தென்மொழி வளர்ச்சிக்கு ஓரிரு சமயங்களில் ஐம்பதைம்பதாகவும் நன்கொடை நல்கியுள்ளார். அதன் பொருட்டாக, அவர் தமிழ்ப் புறக்கணிப்பையும், திருக்குறள் பழிப்பையும் கண்டியாமல் விடாதது ஒன்றே நாம் பண வருவாயில் குறியாக இல்லை யென்பதற்கும், நம் தொண்டிற்குதவும் வினைபடு கருவியாகவே பொருளைக் கருதுகிறோமே அல்லாமல் வழிபடு கருவியாக அதனை என்றும் கருதிலோம் என்பதற்கும் போதிய சான்றாகும். இனி, நம் பொருள் நோக்கமற்ற தன்மைக்கு நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகளைக் கூற முடியும். அவற்றை உண்மையான எம் நெருக்க அன்பர்களும் அறிவர். ஈண்டவற்றை விரிக்க இடமில்லை. தேவையாயின் தகுந்த விடத்தில் எழுதுவோம். எனவே, வெளிப்படையான எம் விருப்பு வெறுப்புகளுடன், தமிழ்ப் புறக்கணிப்பையும் திருக்குறள் பழிப்பையும் இணைத்துக் கூறி அவற்றை எவரும் நயன்மைப் படுத்த வேண்டா என்று கேட்டுக்கொள்கின்றோம்.

இனி, சாலை இளந்திரையன் அவர் கட்டுரையில் இறுதியாக நாம் செய்து கொண்டுள்ள, இனிச் செய்ய வேண்டிய குமுகாயப் பணிகளின் அளவுகளைக் கூறி, நம்மை அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார். இப்படி யெல்லாம் ஒருவரை ஒருவர் **திட்டிக்** கொண்டிருக்க நேரமில்லையாம். எனவே, நாம் ஒருவரோடு ஒருவர் **மோதிச்** சோராமல், இணங்கிச் சேர்ந்து, குமுகாய உணர்வை **நெஞ்சில் நிறுத்தி,** அவரவர் பணிகளில் ஈடுபடுவோம் என்று அறிவுரை கூறியுள்ளார். எப்படி? இவர் திருக்குறளை 'மூசியத்திலே' வைக்கச் சொல்லித் துடுக்குத்தனமாக எழுதியதைப் பற்றியும், தமிழ்ப் பேராசிரியராகப் பணி செய்து வாழ்க்கை நடத்தும் இவர் தமிழ் வளர்ச்சிப்பற்றி அக்கறை கொள்ளாமற் போனாலும், அதைக் கெடுத்து வரும் கீழ்மையைப் பற்றியும் சுட்டிக்காட்டியதற்கு, ஒருவரை ஒருவர் **'திட்டி'க்** கொள்வது என்று பெயர் தருகிறார் இவர். **'மோதி'க்** கொள்வது என்று தலைப்பிடுகிறார் இவர். இவர்தாம் தம்மை 'அறிவியக்கத்தவர்' என்று கூறிக் கொள்கிறார். எப்படி யிருக்கின்றது? இவரின் தனிப்பட்ட செய்திகளைப் பற்றிப் பேசுவது நம் கருத்தன்று. இவர் தமிழுக்குப் பிழை செய்வதை நாம் கண்டு கொள்ளக் கூடாதாம். திருக்குறளைப் பழித்துப் பேசுவதை நாம்

தட்டிக் கேட்கக் கூடாதாம். தப்பித் தவறி இவர் தமிழராகப் பிறந்துவிட்டதற்காக நாம் வெட்கப்படுகிறோம். 'தமிழைப் புறக் கணித்த இவரை, திருக்குறளைப் பழித்த இவரை நாம் தட்டிக் கேட்டதற்காக, நம்மைச் 'சிறுபிள்ளைத்தனம்' என்றும் 'கக்கிய' என்றும் எழுதிய இவர்தாம் நம் 'குணம்' பற்றிப் பேசுகிறார். இவர் தன்மை பற்றி அறிவுடையவர்களே விளங்கிக் கொள்ளட்டும்.

நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்.

—பொறுப்பாசிரியர்.

## புதிய துணைவேந்தர் பர். வ. சுப. மாணிக்கம் வாழ்க!

மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் புதிய துணைவேந்தராக **பர். வ. சுப. மாணிக்கம்** அவர்கள் பொறுப்பேற்றமை கண்டு மகிழ்ந்தோம்.

**பர். வ. சுப. மாணிக்கம்** அவர்கள் தாம் கொண்ட கொள்கையை எந்த ஒரு நிலைக்கும் வளைய விடாத பேராண்மையாளர். தனித்தமிழ் மீதும் பாவாணர் மீதும் தனிப்பற்றுக் கொண்ட இவர் இப்பல்கலைக் கழகத்தின் முதல் தூய தமிழ்த் துணைவேந்தர் என்று கூறுமளவிற்கு பொறுப்பேற்றுள்ளார்.

அண்ணாமலையில் புலவர் பட்டம் பெற்றவர் இவர். அங்கேயே ஆசிரியராகவும் பணியாற்றிக் கொண்டே கீழைக்கலை இளைஞர், முதுகலை, கீழைக்கலை முதுவர் பட்டங்களையும் பெற்று, கழக இலக்கியங்களில் காதல் பற்றி ஆய்வு செய்து **'தமிழ்க்காதல்'** என்ற இடு நூலை வெளியிட்டுப் புகழ் பெற்றார். அதன்பின் அழகப்பர் கலைக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பொறுப்பேற்று, பின்னர் அக்கல்லூரியின் முதல்வராகவும் திகழ்ந்தார். இதனைக் கொண்டே தமிழ்ப் பேராசிரியர்களில் ஆளுமைத் திறன் மிகுந்தவர் இவர் என்பதைத் தெள்ளிதின் விளங்கலாம்.

மதுரைப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக வரும் வாய்ப்பு வந்து கொண்டிருப்பது தெரிந்தும், அரசு எது கூறினும் சரியே என்ற நிலையில் இல்லாது, தமிழ் எழுத்துச் சீர்திருத்த அரசுச் சட்டத்தை முதலில் மறுத்து எழுதிய தமிழறிஞர் இவரே. இதனின்று இவரின் தன்மானப் போக்கினையும் கொள்கை உறுதியையும் பதவிப் பித்தின்மையையும் நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

இவ்வறிஞர், இஃதோடு தமிழகப் புலவர் குழுத் தலைவராகவும், உலகத் தமிழராய்ச்சி நிறுவன அறிவியல் குழு உறுப்பினராகவும், தமிழ்நாடு தெய்வீகப் பேரவை உறுப்பினராகவும், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்-ஆங்கில அதரமுதலிக் குழு உறுப்பினராகவும் இன்ன பல பொறுப்பினராகவும் விளங்குகிறார்.

இப்புதிய பொறுப்பேற்றமையால் தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் நற்பயனும் நற்புகழும் கிடைக்கும் என நாம் நம்புகிறோம்.

# செய்திகள்

**1. திருக்குறள் பேரவை – நாகை-3 ஆம் ஆண்டு விழா:**

சென்ற 22-7-79 ஞாயிறு. நாகைப்பட்டினம், குமரன் திருமணக் கூடத்தில், காலை 9-30 மணியளவில், திருக்குறள் பேரவை-நாகைக் கிளையின் 3-ஆம் ஆண்டு விழா, அருட்தந்தை **எசு. பாக்கியசுவாமி** க. இ; ஆ. ப. அவர்கள் தலைமையில் நடை பெற்றது. காலை நிகழ்ச்சியில் திருக்குறளார் **வீ. முனிசாமி,** 'அறம் பாடும் விழுமிய நுண்மை' என்ற தலைப்பிலும், பொறுப் பாசிரியர் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** 'தமிழ் கூறும் நல்லுலகு-தூய தமிழ்' என்ற தலைப்பிலும் சொற்பொழிவு நிகழ்த் தினர். மாலை நிகழ்ச்சி தவத்திரு **குன்றக்குடி அடிகளார்** தலைமையில் நடைபெற்றது. பேரா. **சாமி, தியாகராசன்** க. மு; க. இ. உரை நிகழ்த்தினார். திரு. **வீ தியாகராசன்** அவர்களின் தமிழிசையுடன் விழா இனிது நிறைவுற்றது. பாவலரேறு அவர் களுடன் சித்தோடு பாவலர் திரு. **குமர. நடவரச சிவப்பனாரும்,** சிங்கைப் பாவலர் திரு. **முல்லைவாணன்** அவர்களும் விழாவில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

**2. தமிழ்ப் பாதுகாப்புப் பேரவை, ஆத்தூர். (நெல்லை)**

கடந்த 10-8-79 வெள்ளி இரவு 8 மணி யளவில், நெல்லை மா. வ. ஆத்தூர் பேரூராட்சி மன்றத்தின் முன்னுள்ள திடலில், ஆத்தூர் தமிழ்ப் பாதுகாப்புப் பேரவையின் சிறப்புக் கூட்டம், பேரவைத் தலைவர் திரு. **மா. வெ. செல்லையா** அவர்கள் தலைமை யில் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின், புலவர். **சங்கர. பொன்னம்பலம்** உரையாற்றினார். அவரை யடுத்து, சாயர்புரம், போப் நினைவு மேனிலைப் பள்ளித் தமிழாசிரியர் புலவர். **இரா. செயசிங்** அவர்கள் உரையாற்றினார். பின்னர் சித்தோடு பாவலர். திரு. **குமர நடராச சிவப்பனார்** உரையாற்றினார். அடுத்து அவ்வட்டாரப் பள்ளிகளில் தமிழில் சிறப்பாகத் தேறிய மாணவியர் செல்வி. மு. தீபா, செல்வி. பா. மீனாட்சி, செல்வி. யோ. இரெசி ஆகி யோருக்கு, கொடைஞர், திருவாளர்கள் மா. மணி, மங்களபாண்டி, சேக் தாவூது ஆகியோர் வழங்கிய கைக்கடிகாரம், மிசைக்கடிகாரம், பெட்டி ஆகிய பொருள்களை முறையே முதலாம், இரண்டாம், மூன்றும் பரிசுகளாக, பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** வழங்கினார். இறுதி யில் பாவலரேறு அவர்கள் 'குமரி முதல் இமயம் வரை' என்னுந் தலைப்பில் அரியதொரு சிறப்புரையாற்றினார்கள். நன்றியுரையுடன் நிகழ்ச்சி இரவு 1 மணி யளவில் முடிவுற்றது. விருந்தினர்களுக்கு இனிய சிற்றுண்டி, பேரவைச் சார்பில் வழங்கப்பெற்றது.

(தொடர்ச்சி 35-ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழம்: மார்க்சியலார் நிலை என்ன?

தென்மொழி-வல்லத்தரசு

அண்மைக் காலமாக இந்திய அரசியலரங்கில் பதவிப் பொறுக்கிகளின் கேடுகெட்ட அரசியல் நாடகங்கள் வரம்பின்றி ஆடப்பெற்று, இந்தக் கயவர்களின் வாழ்க்கையும், பேச்சும், பிறழ்வுகளுமே நாட்டின் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையாக, இன்றியமையாச் சிக்கலாக உருமாற்றம் செய்யப் பெறுகின்றன. பதவி நாற்காலிகளுக்கு வெறிநாய்களைப் போலவேயும் இந்த முற்போக்கு—பிற்போக்கு—மேல்போக்கு—கீழ்ப்போக்கு அரசியல் எத்தர்களின் கண்களுக்கு மக்களோ, மொழி நலனோ, இன அழிவுகளோ பட்டதாகத் தெரியவில்லை; தெரியாததுதான். என்றுமுள்ள கதைதான் இஃது எனினும் இன்று உயர்நிலை அடைந்திருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில், அண்மை நாடான இலங்கையில், பெரும்பான்மைச் சிங்களவர்களின் கொடுமைகளுக்கும், அடக்குமுறைகளுக்கும் முடிவுகட்ட, சிறுபான்மைத் தமிழ் மக்கள்—இறுதித் தீர்வாகத் 'தமிழீழம்' கண்டு, தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ள முடிவு செய்து, இடையறுத துணிந்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கொடுமைக்காளானவர்களின் ஒரு பகுதியினர் தமிழகத்திற்குத் திருப்பி அனுப்பப்படவிருக்கும் தமிழர்கள். அடிபட்டவர்கள் வடநாட்டவராயிருப்பின் சிக்கல் உலக அரங்கிற்குச் சென்றிருக்கும். ஆனால் இவர்கள் 'எளிய' கூலிக்காரத் தமிழர்கள் தாமே? அவர்கள் அப்படித்தான் நடந்து கொள்வார்கள். ஆனால் இந்தச் சிக்கலை மார்க்சியலார் எந்தக் கோணத்தில் பார்க்கின்றனர்?

வியட்நாமில் குண்டு விழுந்தால் விக்கிக் கொள்கிறது; கம்பூச்சியாவில் போல்பாட்-இயாங்சாரி இனக் கொலைக்கு எதிர்ப்பு; சிலியில், ஆப்கனில், அங்கோலாவில், நிகரகுவாவில் என்று உலகில் எங்கே மக்கள் ஒடுக்கப்பட்டாலும் பொங்கி எழுகிறவர்கள், அண்மை நாடான இலங்கையில் நடந்த இனப் படுகொலை கண்ணில் படவில்லையா? அப்படிச் சொல்ல முடியுமா? முடியாது. அவர்கள் கூரிய பார்வையிலிருந்து எதுவும் தப்ப முடியுமா? பின் ஏன் எந்த எதிர்ப்பும் காட்டவில்லை. அங்கே மடிந்தவர் மக்கள்; இங்கே அழிந்தவர் தமிழர், என்பதனாலா? இலங்கையின் பீட்டர் கெனமனு கட்டும் இங்கேயுள்ள பொதுவுடைமைத் தலைமைகளாகட்டும் வாய் திறக்கவில்லை; திறந்து உதிர்த்த கருத்துகளும், - பாரதப் போரில் அர்ச்சுனனுக்கு கண்ணன் அறிவுறுத்தியது போல், 'இது வெறும் இனச் சிக்கல்', 'தமிழ் முதலாளிகளின் சூழ்ச்சி வேலை', 'இனப்பகை கூடாது'—என்ற அள்ளி அரவணைக்கும் அனைத்துத் தேசிய பேச்சுத் தான். யாருக்குத் தெரியாது இது? 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று இரண்டாயிரம் ஆண்டுகளாக நாம் மட்டும் கூவு

கிறோம்; அடுத்தவன் ஏற்றுக்கொண்டால்தானே? ஒரு கையை எங்கே தட்டி ஒலி எழுப்புவது? இது 'வெறும்' இனச் சிக்கலோ, மொழிச் சிக்கலோ—கொல்லப்பட்டவர் தமிழர்கள்; மக்கள்தாம்! இஃதாவது நெஞ்சில் உறுத்தவில்லையா?

இந்த நிலையில், கழிவு விலையில் கண்காட்சியில் வாங்கிய மார்க்சியப் பொத்தகங்களைப் புரட்டத் தொடங்கியிருக்கும் விடலைகள் சில தமிழீழம் குறித்து, **A non-Communist is an anti-Communist**—மனப்பான்மையின் விளைவான கழுகுப் பார்வை யுடன், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று, 'விளக்க'மளிக்க முன் வந்திருப்பது நகைப்பிற்குரியது. இந்த நாட்டில் வேரூன்றி நின்று கொண்டு, பொதுவுடைமைக்கான பாதை எது, எப்படி—என்பதில் குடுமிப்பிடி சண்டையிடும் இவர்கள், வேறொரு நாட்டில் நடக்கும் போராட்டத்தின் உயிர்நாடி புரியாமல் இப்படி எம்பி எம்பிக் குதிப்பதன் நோக்கம் புரியவில்லை.

இவர்கள் குற்றச்சாட்டு: ஈழ விடுதலை முன்னணியினருக்கு மார்க்சியம் தெரியாது. இன்னும் மேலே: 'அவர்களுக்கு அதில் நம்பிக்கையில்லை, பொதுவுடைமை அமைப்பை நிறுவமாட்டார்கள்! எனவே தமிழீழப் பிரிவினையே தவறு.' அப்படித்தானே? இப்படி இவர்கள் பேசுவார்கள் என்று முன்னுணர்ந்துதான் அறிஞர் இலெனின், "ஒடுக்கும் நாட்டினத்தைச் சார்ந்த பொதுவுடைமை யினர், ஒடுக்கப்படும் நாட்டினத்தைப் பற்றிக் கொள்ளும் கருத்தில் அவர்கள் செய்யும் ஒரு பொதுத் தவற்றைக் கூற வந்த மார்க்சு— நசுக்கப்படும் நாட்டினங்கள் தொடர்பாகத் தாம் ஆற்றவேண்டிய நிகரமைக் கடமைகளை உணர்ந்து கொள்ள அவர்கள் தவறியது, **ஆளுமை செலுத்தும் நாட்டினத்தின் முதலாளிகளிட மிருந்து** அவர்கள் தப்பெண்ணங்களைப் பெற்று **அப்படியே** எதிரொலிப்பதுதான் என்கிறார்" என்று தெளிவாக்குகிறார். (நாட்டினங்களின் தன்னாட்சி உரிமை).

தாய் மொழியில் எண்ணித் தாய் மொழியில் பேசுவதை, 'குறுகிய பார்வை' என்று எப்படி ஒதுக்க முடியாதோ, அப்படியே அம்மொழியினை அடிப்படையாகக் கொண்ட இனத்தையும் ஒதுக்க முடியாது. இனம் என்ற 'இருப்பை' எந்தக் கொள்கையும் விலக்க முடியாது. ஆனால் இனப் பெருமையும் இனப் பகையுமே ஒதுக்கப்பட வேண்டியவை. "ஒரு நாட்டினம் இன்னொரு நாட்டினத்தை அடிமைப்படுத்துவது எவ்வளவு கொடுமையானது என்பதை அயர்லாந்து வரலாறு காட்டுகிறது" என்ற மார்க்சின் கூற்றும் விலக்கப்பட வேண்டியதுதானா? அங்கே தமிழர் தலைவர் யாரும் இட்லராகவோ, முசோலினியாகவோ இல்லை; வரவும் முடியாது. அந்த 'வாய்ப்பு', பெரும்பான்மையினரும், தங்களதே நாடு என்ற வரலாற்றுப் பிறழ்வுணர்வும் கொண்ட சிங்களர்க்கே உண்டு.

சிங்கள ஆட்சியினரால் இரண்டாம் நிலைக் குடிமக்களாகக் கருதப்பட்டு நடத்தப்படும் தமிழர்கள்—வந்தேறிகள் என்ற பழிச் சொல்லைப் புகுத்தி—Devide and Rule என்ற முறையில் பிரித்தாளப்படுகிறார்கள். அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளும், உரிமைப் பறிப்புகளும் விளக்கத் தேவையில்லாதன. இந்நிலையில் உரிமைக்குப் போராடுவது தவிர்க்க முடியாத ஒரு நிலை. இந்த இயக்கத்தை மறுப்பதும் ஒதுக்குவதும் சிக்கலை முடிவுக்குக் கொண்டு வரா. 'நாட்டின இயக்கங்கள் வரலாற்று வழியில் முறையானவை என்பதை மார்க்சியலார் **முழுமையாக** ஏற்றுக்கொள்கிறார்' (இலெனின்). ஆனால் அப்படிப்பட்ட நாட்டின இயக்கங்கள் முதற்கட்டத்தில் ஒரு முதலாளிய இயக்கமாக இருப்பது தவிர்க்க முடியாததாகும். இது வரலாறு காட்டும் உண்மை. அதற்காக அதனை ஒதுக்குவதும் எதிர்ப்பதும் அறிவற்ற செயலாகும்.

"முதலாளிய வளர்ச்சி எல்லா நாட்டினங்களையும் ஒரு தனி வாழ்வு நடத்த ஊக்குவதில்லை. ஆனால் நாட்டின மக்கள் இயக்கங்கள் தொடங்கிய பின் அவற்றை ஒதுக்கித் தள்ளுவதும், அவற்றில் முற்போக்கானவற்றை ஆதரிக்க மறுப்பதும் **தேசியவழக்குத் தப்பெண்ணங்களுக்கு ஊக்கமளிப்பதாகும்.** அஃதாவது தன் நாட்டினந்தான் சிறந்த இனம் (அல்லது தம் இனத்துக்கு மட்டும்தான் அரசு ஒன்றை அமைக்கும் சிறப்புரிமை உண்டு) என்று கொள்வதாகும்." என்ற பேரறிஞர் இலெனின் கூற்றைத் 'தமிழீழ' எதிர்ப்பாளர் பார்வைக்கு வைக்கிறேன். இது மார்க்சியம் 'பேசும்' உங்களுக்கு உடன்பாடா? இல்லையா? விடுதலை முன்னணியினர் மார்க்சியத்தைத் தூக்கிப் பிடிக்கவில்லை என்று ஓலமிடும் மார்க்சியப் பூசாரிகளே, முதலில் நீங்கள் மார்க்சியத்தைக் குழிதோண்டிப் புதைத்துப் பூசை நடத்தும் இடத்தைக் காட்டுங்கள். அவர்கள் அதைத் தோண்டி எடுத்துப் புதுக்கிச் செயல்படுத்த அணியமாயிருக்கிறார்கள். கரணியம், மார்க்சியம் என்பது நடைமுறைக் கொள்கை—வளர்ச்சி நிலையின் இறுதி நிலையான இன்றைய கட்டம். இதை யாரும் எதிர்ப்பதும் நெருப்புக் கோழியின் செயலாகும். ஆனால், "Only by a serious of attempt each of which taken by itself, will he one sided and will suffer from certain inconsistencies will complete socialism be created (Complete works Vol. 127, P. 346) என்ற இலெனின் மொழிகளை மனத்தில் கொள்ளுங்கள்.

நெருக்கடி நிலைமை நீக்கவும், போராட்ட இயக்கங்கள் நடத்தும் உரிமைக்கும், சிறைப்பட்ட அரசியல் போராடிகளை விடுதலை செய்யவும் கோரி போபாலில் மாநாடு கூட்டிக் குரல் எழுப்பும் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் நடுவண் செயலகத்தின் தீர்மானம் கூறுகிறது: "Our party is committed to fight not-

முன்னிதழ்த் தொடர்ச்சி தொடர்-2

# தமிழ்த் தாயே சொல்கிறுளாம்!

—தமிழவேள்.

"தமிழ்ச் சங்கங்களின் வரலாறு" என்னும் நூலில் துடிசைக் கிழார், அ. சிதம்பரனுர் அவர்கள் ஆரியம் மட்டுமன்றி சீனம், எகுபதியம், சீயம், கூர்ச்சரம், சிந்தியம், அராபி, ஆந்திரம், கன்னடம் முதலான பிற மொழிகளும்கூட, தமிழ் எழுத்துகளைப் பார்த்தே தம் மொழி எழுத்துகளை அமைத்துக் கொண்டன என்பதை விரிவாகச் சொல்கிருர்.

"ஆழிவடிம்பலம்ப நின்ற பாண்டியன் காலத்தில் சீன தேசத்தார் தமிழ்நாட்டுத் தங்கக் கனிகளிலும் இரத்தினக் கனிகளிலும் வேலை செய்து வந்தனர். அக்காலத்தில்தான் சீனம், எகுபதியம், சீயம், கடாரம் முதலிய மொழிகளுக்குத் தமிழ் உருவ எழுத்துகளைப் பார்த்து உருவ எழுத்துகளை அமைத்துக் கொண்டனர். அதற்கு முன் அம் மொழிகளுக்கு எழுத்துகள் கிடையா. இன்னும் அம் மொழிகளில் உருவ எழுத்துகளே நடைமுறையில் உள்ளன.

"தமிழ் மொழி கோல் எழுத்தாக (Pitmanin Shorthand like -பிட்மனின் சுருக்கெழுத்தைப் போல்) இருந்த காலத்தில்தான் மராடம், கூர்ச்சரம், ஒட்டிரம், சிந்தியம், அரவம் (Arab) முதலிய மொழிகள் பிரிந்தன. அம் மொழிகள் எல்லாம் இன்னும் கோல் எழுத்துகளாலேயே நடைபெற்று வருகின்றன. கோல் எழுத்துக் காலப் பிற்பகுதியே ஆரியர் வருகை. ஆரியர் சிந்து கங்கைச் சமவெளியில் குடியேறிய ஞான்று தமிழ், மராடம், சிந்தி முதலிய எழுத்துகளைப் பார்த்து தம்முடைய ஆரிய மொழிக்கும் எழுத்துகளைக் கற்பித்துக் கொண்டனர். அதுவரை ஆரிய மொழிக்கு எழுத்து இல்லை. அந்த மாதிரி ஏற்படுத்திய எழுத்தே 'நாகரம்' எனப் படுவது.

"தமிழ் வட்டெழுத்துக் காலத்தில்தான் ஆந்திரம் கன்னடம் முதலிய மொழிகள் தமிழினின்று பிரிந்தன. ஆந்திரரும் கன்னடரும்

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

only against communalism, but also against authoritarianism in all its manifestations and form wherever it exists. An unequivocal and convincing assurance that the fight against authoritarian force will not be relented but carried forword is called for. (NEW AGE 29-7-79) இது வெறும் தீர்மானமாக மட்டுமில்லாமல், தமிழீழம் குறித்தும் ஒடுக்கப்படும் தமிழர்களின் போராட்டம் பற்றியும் ஓர் இணக்கமான செயல்முறைத் துணைக்கு வழிகாட்டியாக அமையுமா? o

தமிழ் வட்டெழுத்துகளைப் பின்பற்றியே வரி வடிவங்களை அமைத்துக் கொண்டனர்,'' என்கிறார்.

உலக மொழிகளுக்கெல்லாம் தாயாகி நின்று ஆரியம் உட்பட அம்மொழிகளுக்கெல்லாம் வரிவடிவையும் தந்த தமிழ், ஆரிய மொழிக்குப் பின்னாலே பிறந்து வளர்ந்து அம் மொழிக்கு நிகராக வாழ்ந்தது என்று சொல்வது எவ்வளவு பெரிய பொய்! எவ்வளவு பெரிய புரட்டு!

உலகின் கண்ணுள்ள முழுமையான சிறந்த மொழிகளுக்குள் உயர்ந்த மொழி ஆரிய மொழிதானாம். அதற்கு அடுத்தபடியாக—அதற்கு நிகராகத் தமிழ் வாழ்ந்ததாம். அதுவும் ஆரிய மைந்தன் அகத்திய வேதியன் இலக்கணம் செய்து கொடுத்ததால் அந்த நிலை பெற்றதாம். பொய் சொல்வதற்கும் புரட்டு செய்வதற்கும் கூட ஓர் எல்லை இருக்க வேண்டாமா? என்னதான் தமிழர்கள் தூங்கிக் கொண்டிருந்தாலும் அவர்களுடைய தொடையில் இப்படியா கயிறு திரிப்பது! அதுவும் பாரதியார் போன்ற பாவலரா திரிப்பது? எல்லையில்லாத பொய்யாக—எல்லையில்லாத புரட்டாக இருக்கிறதே இது!

உலக மொழிகளிலேயே தலைசிறந்த உயர் தனிச் செம்மொழி தமிழே என்பதற்கு எடுத்துக் காட்டுகளாக ஒன்றிரண்டல்ல—பலவற்றைக் கூற முடியும். ஆரிய மொழிக்கோ பிற மொழிக்கோ இல்லாத—தமிழ் மொழிக்கு மட்டுமே உள்ள—சிறப்புகள் சிலவற்றைப் பாருங்கள்.

(1) ஆரியம் உள்ளிட்ட பிற மொழிகள் இலக்கண அமைப்பிலும் ஒலி அமைப்பிலும் பழங்காலத்துக்கும் இடைக்காலத்துக்கும் வேறுபாடு மிக்குடையனவாக இருக்கின்றன. ஆனால் தமிழ் மொழி அப்படியில்லை. இதனைத் "தொல்காப்பியச் செல்வம்'' என்னும் நூலில் பேராசிரியர் இலெ. ப. கரு. இராமநாதன் அவர்கள் தெளிவாகச் சொல்கிறார். "வடமொழி, பாரசீக மொழி, ஆங்கிலம் முதலியவற்றில் பழைய மொழிக்கும் இடைக்கால மொழிக்கும் பெரிதும் வேறுபாடு இருத்தலைக் காண்கிறோம். வேத காலத்து வடமொழியும் இலக்கியக் காலத்து வடமொழியும் வெவ்வேறு தனி மொழிகளைப் போல நிற்கின்றன. அவை தனித்தனி இலக்கணம் உடையனவாகவும் காணப்படுகின்றன. பாரசீக மொழியும் ஆங்கில மொழியும் அவ்வாறே உள்ளன. ஆனால் தொல்காப்பியர் காலத்திலேயே தமிழ் மொழி மிகப் பண்பட்டு ஒரு வரையறையான உருவத்தினை அடைந்து விட்டது. அதனால்தான் இலக்கண அமைப்பிலேனும் ஒலி அமைப்பிலேனும் மிகப் பெரிய மாறுதல்கள் பின்னர் நிகழவில்லை'' என்கிறார்.

(2) இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்று மூன்று பிரிவுகளை உடையதாய் முத்தமிழ் என்று வழங்கும் சிறப்பு தமிழ்

மொழி ஒன்றுக்கே உரியது. முவ்வாங்கிலம் முச்சமற்கிருதம் என்னும் வழக்கு பிறமொழிகளில் இல்லை. இதனைத் தமிழ் அறிஞர் கா. சுப்பிரமணியனார் எம்.ஏ. எம்.எல். அவர்கள் இப்படி விளக்கிச் சொல்கிறார்; "இயற் பகுதியே இலக்கியம் என ஏனைய மொழிகளுள் வழங்கவும் இசைக்கொரு பெரும் பிரிவும், கூத்திற்குப் பிரிதொரு பகுதியும் சேர்த்து மூன்றாக நமது மொழி வழங்கிய பான்மை, உள்ளம் மொழி உடல் என்னும் மூன்றையும் நன்கு காட்டும் மூன்று கண்ணாடி போல முத்தமிழ் நிலவியதென்பதை வற்புறுத்துகின்றது. என்னை? உள்ளக் கருத்தின் நயங்களை இயற்றமிழ் உணர்த்தும். மொழிக்கு இனிமை பயப்பது இசை. உடற்செய்கையாற் கருத்தை விளக்குவது நாடகம் ஆதலின் என்க."

*(3)* பிற மொழிகளில் எல்லாம் எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமே இலக்கணம் உண்டு. வடமொழியிலும் அப்படியே. ஆனால் தமிழில் மட்டுந்தான் எழுத்து சொல் என்பதோடு பொருள் என்றும் ஓர் இலக்கணம் இருக்கிறது. அகப்பொருள் புறப்பொருள் என்று அது சொல்கிறது. மக்கள் தம் உள்ளத்து உணர்ச்சியாகிய இன்ப அன்பின்பாற்பட்ட அக வாழ்க்கையைப் பற்றிய செய்திகளைக் கூறுவது அகப் பொருளாகும். அறஞ் செய்தலும் பொருளீட்டலும் போர் புரிதலும் ஆகிய புற வாழ்க்கையைப் பற்றிய செய்திகளைக் கூறுவது புறப் பொருளாகும். "ஒருவனோடு ஒருத்தி கூடி வாழ்கின்ற வீட்டு வாழ்க்கையிலிருந்து நாட்டு வாழ்க்கை வரை இலக்கணம் கண்ட பெருமை தமிழுக்கன்றி வேறு எம் மொழிக்கு உண்டு?" என்கிறார் தவத்திரு. குன்றக்குடி அடிகளார். பேரறிஞர். பா. வே. மாணிக்கனார் அவர்கள் இந்தப் பொருள் இலக்கணச் சிறப்பைப்பற்றி இவ்வாறு எழுதுகிறார்: "பொருள் இலக்கணம் என்பது மக்கள் கருதுவதற்குரியனவும் அடைய முயல்வதற்குரியனவும் ஆகியவற்றின் இலக்கணமாம். தமிழ் இலக்கணங்களில் இஃது ஒரு பகுதியாய் அமைந்து பிறமொழியினின்று தமிழை ஒரு தனி நிலைக்கு உயர்த்துகின்றது. மக்கள் கருதுவதற்குரியனவும் அடைய முயல்வதற்குரியனவும் ஆகியவற்றை இலக்கணத்தில் ஒரு பகுதியாக்கியது, வாழ்க்கையின் நெறிகளை மொழிகளின் நெறிகளோடு ஒன்றுபடுத்த வேண்டும் என்ற நோக்கம் தமிழ் இலக்கண நூலார்க்கு இருந்ததென்பதைத் தெற்றென விளக்குகிறது."

*(4)* தமிழ் எழுத்துகளை உயிர் எழுத்து என்றும் மெய்யெழுத்து என்றும் பிரித்துப் பெயரிட்டிருக்கிறார்களே அந்தப் பெயர்கள் உயர்ந்த மெய்ப்பொருள் கொள்கையுடன் பொருந்தியனவாக உள்ளன. வடமொழி எழுத்துகளின் பெயர்களாகிய அச்சு, அல், என்பனவோ யாதொரு சிறந்த கொள்கையும் உடையனவாக இல்லை. மெய்யெழுத்தாகிய உடல் போன்ற எழுத்தாகிய ஒற்றெழுத்தை முதலில் உடைய சொற்கள் தமிழில் இல்லை. "உயிர்

மெய்யல்லன மொழி முதல் ஆகா,'' உயிர் எழுத்தோடு சேராத மெய் யெழுத்து சொல்லுக்கு முதலில் வரக்கூடாது என்பது தமிழ் இலக் கணம் இடுகின்ற கட்டளை. ஏன்? உயிரோடு சேராத மெய்-உயிர் பிரிந்து நிற்கின்ற மெய்-செத்த உடம்பு போன்றது. செத்த உடம்பு எங்கேனும் முன்னிற்பதைக் காண முடியுமா? அந்த முறையையே மொழியிலும் இருக்குமாறு இலக்கணம் வகுத்திருக்கும் தமிழர் தம் பெருமையை, "தமிழ் எழுத்துகளின் நுண்மை விளக்கம்" என்னும் நூலில் பேரறிஞர். பா. வே. மாணிக்கனர் அவர்கள் பாராட்டு வதைப் பாருங்கள்.

"ஒற்றெழுத்தை முதலில் உடைய சொற்கள் தமிழ் ஒழிந்த பிற மொழிகளில் உள்ளன. அவை சிறந்தவற்றையும் இழிந்தவற்றையும் குறிக்கப் பெருவாரியாக எழுத்தாளப்படுகின்றன. (ஆங்கிலத்தில் அத்தகைய சொற்கள் சில : **Christ, Crime; Druid, Drunkard; Friar, Fret.** வடமொழியில் அத்தகைய சொற்கள் சில; ச்ரீ-ச்ரார்த்த; க்ருபா-க்ரூர; ப்ரார்த்தன, ப்ராயசித்த; ப்ரம்ப, ப்ரட்ட.) ஒற்றெழுத்தை முதலில் உடைய ஒரு சொல்லைப் பலுக்க முடியாதவர் களாய் தமிழர் இருந்தார் கொல்? இல்லையெனில், 'உயிர் மெய் அல்லன மொழி முதல் ஆகா'' என்ற விலக்கொணு நெறியை வகுக்க அவர்களைத் தூண்டியது யாது? இந்நெறியைத் தமிழர் தம் மொழிக்கே யன்றி பிற மொழிக்கும் ஏற்றுகின்றனர். (க்ருப என்ப தைக் கிருப என்றும் ம்ருக என்பதை மிருக என்றுந் தாமே சொல் கின்றனர்?) நம்மைச் சூழ்ந்துள்ள உயிர்த்திரளை நோக்குவோமாயின் செத்த உடம்பு ஒழுங்குபட்ட ஒரு தொகுதிக்கு முன்னிற்காதென்பது நமக்கு விளங்குகின்றது. தமிழ் இலக்கண நூலார் ஒற்றெழுத்து களைச் செத்த உடம்பு என்று கருதி அவற்றிற்கு உடலென்றும், இவற்றை இயக்கும் எழுத்துகளை ஆவியென்று கருதி உயிரென்றும் பெயரிட்டனர். உயிர் வகையில் நாம் காணுகின்ற முறையே மொழி யிலும் இருக்க வேண்டுமென்ற கருத்து அவர்களுக்கு இல்லா திருப்பின், 'உயிர் மெய் யல்லன மொழி முதலாகா' என்று இவர்கள் இட்ட கட்டளைக்குக் காரணம் காணல் அரிது."

(5) பகுத்தறிவுடைய மக்கள் முதலிய உயிரை உயர்திணை என்றும் பகுத்தறிவில்லாத உயிரையும் உயிரல் பொருளையும் அஃறிணை என்றும் அறிவுபற்றிப் பாகுபாடு செய்திருப்பது போல வடமொழி பாகுபாடு செய்யவில்லை. இதுபற்றி நாவலர் ச. சோம சுந்தர பாரதியார் இப்படி அரிய விளக்கம் தருகிறார் : "உயர்திணை என்னும் பிரிவுக் கொள்கை தமிழில்தான் உண்டு. திணை என்றால் ஒழுக்கம் ஆகும். விருப்பம் செல்லும் வழி செல்லாமையே ஒழுக்கம். அஃதாவது ஆள்வினையுடைமை. விருப்பத்தைத் தணித்து அறிவால் ஆளுவது திட்பம்; திண்மை என்று கூறலாம். எனவே திண்மை பற்றித் திணை வந்ததோ என நினைக்கிறேன். ஒழுக்கமுடைமை

தான் மாந்தனை விலங்கினின்று வேருக்குகிறது. விரும்புகிறபடி போகாமல் அறிவால் மனத்தை ஒருவழி நிறுத்தலே ஒழுக்க முடைமை. எனவே உயர்ந்த ஒழுக்கத்தை உடையது உயர்திணை ஆயிற்று. அஃறிணை என்றால் இழிந்த திணையில்லை. திணை யில்லாதது (ஒழுக்கமற்றது என்று பொருள்). அல் + திணை. அஃறிணையாகும். ஒழுக்கத்தை உடையவர்கள் எல்லாம் உயர் திணை.”

(6) தமிழ் இலக்கணத்தில் இயற்கையில் உள்ளபடி பால் வேற்றுமை சொல்லப்படுகிறது. ஆனால் வடமொழியில் அப்படி யில்லை. தமிழில் உள்ள பால்வேற்றுமைப் பிரிவில் முறை தவறுதல் சிறிதுமில்லை. வடமொழியில் உள்ள பால்வேற்றுமை பிரிவோ சொல்லைக் கொண்டு ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும், இரண்டையும் அலியாகவும் குறிக்கின்ற முறை தவறுதல் உடையது. வடமொழியில் மனைவியைக் குறிக்க மூன்று சொற்கள் உள்ளன; பாரியை, தாரம், களத்திரம் என்பன அவை. அவை மூன்றும் பெண் பால் அல்ல. பாரியை என்பது பெண்பால். தாரம் என்பது ஆண்பால். களத்திரம் என்பது நபுஞ்சகப்பால். (அலிப்பால்,) ஆனால் தமிழில் மனைவியைக் குறிக்கும் சொற்களாகிய இல்லாள், துணைவி, மனைவி என்னும் மூன்று சொற்களும் பெண்பாலே. “வடமொழியில் மரம், மனம், உலகம், மண் முதலான எல்லா வற்றிற்கும் பால்வேற்றுமை கற்பிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் இலக் கணத்தில் அவ்வாறில்லாமல் இயற்கையில் உள்ளபடி பால் வேற்றுமை கற்பித்திருப்பது எத்துணை இன்பம் தருவதாகின்றது?” என்கிறார் செந்தமிழ்ச் செல்வர் திரு. வ. சுப்பையா அவர்கள்.

(7) தமிழ் இலக்கணத்தில் புணரியல் நெறி (சந்தி) என்பது இயற்கையாகவே அமைந்திருக்கிறது. ஆனால் வடமொழியில் அப்படி யில்லை. அவன் என்னும் சொல்லையும் தந்தை என்னும் சொல்லையும் சேர்த்துப் பேசுகின்றபோது அவன்றந்தை என்று யாரும் இயல் பாகச் சொல்வதைப் பார்க்கலாம். தமிழ் இலக்கண நெறியும் அதுவே. ஆனால் வடமொழியில் கங்கா என்னும் சொல்லையும் உதகம் என்னும் சொல்லையும் சேர்த்துச் சொல்வதென்றால் கங்காவுதகம் என்று இயல்பாகச் சொல்லக்கூடாது. ‘கங்கோதகம்’ என்றுதான் சொல்ல வேண்டும். வடமொழி இலக்கணம் அவ்வாறு இருக்கிறது.

(8) தமிழ்ச் சொற்களின் ஓசை அவற்றின் பொருளுக்கேற்ப அமைந்திருப்பதைப் போல் வடமொழியிலோ பிறமொழியிலோ அமைந்திருக்கவில்லை. தமிழில் பகைவன் என்னும் சொல் வல்லோசை உடையது. நண்பன் என்னும் சொல் மெல்லோசை உடையது. ஆனால் வடமொழியில் சத்ரு என்னும் சொல்லும் அசத்ரு என்னும் சொல்லும் ஒரே ஓசை உடையனவே. அப்படியே சந்துட்டி

அசந்துட்டி, தைரியம், அதைரியம், நியமம், அநியமம், பேதம், அபேதம் என்னும் வடசொற்களில் ஓசை ஒன்றே. அச்சொற்களின் பொருளுக்கேற்ப ஓசை மாறவில்லை. ஆனால் தமிழிலோ மகிழ்ச்சி, வெறுப்பு என்னும் சொற்களில் பண்பிற்கேற்ற ஓசை இருக்கிறது. மிடுக்கு, கோழைமை, நெறி, வழுக்கு, வேற்றுமை, ஒப்புமை, வழ வழப்பு, சொரசொரப்பு, நயம், முரடு என்னும் தமிழ்ச் சொற்களிலும் பொருளுக்கேற்ப ஓசை மாறுபடுகிறது. இது தமிழுக்கே உரிய சிறப்பு.

*(9)* ஒரே சொல் ஓசை வேற்றுமையால் இரு பொருள் தருவது தமிழுக்குள்ள மற்றொரு சிறப்பாகும். 'தபு' என்பது ஒரு தமிழ்ச் சொல். சாவாயாக என்பது அதன் பொருள். தாழ்ந்த குரலில் அச் சொல்லைக் கூறும்போது அது 'நீ சாவாயாக' என்று பொருள் தரும். அதே சொல்லை எடுப்பான—ஆணையிடும் குரலில் கூறும் போது "நீ ஒன்றினைச் சாவச் செய்வாயாக" என்று பொருள் தரும். 'செய்யேன்' என்னும் தமிழ்ச்சொல் வல்லோசையில் உரத்துக் கூறும் போது, 'நான் செய்யமாட்டேன்' என்று பொருள்படும். அதே சொல்லை மெல்லோசையில் (வேண்டுவதுபோல்) கூறும்போது "நீ செய்வாயாக" என்று பொருள்படும். இத்தகைய சிறப்பு வட மொழிக்கும் இல்லை. பிறமொழிக்கும் இல்லை.

*(10)* தமிழ் மொழியிலுள்ள வினைச் சொற்கள் திணை, பால், இடம், காலம், என்பனவற்றை ஒருங்கே உணர்த்தும் சிறப்புடை யவை. 'வந்தான்' என்பது ஒரு வினைச் சொல். அந்த வினைச் சொல் உயர்திணை, ஆண்பால், படர்க்கை, இறந்த காலம் ஆகிய வற்றை ஒழுங்கே உணர்த்துகிறது. 'பாடுவாள்' என்ற வினைச் சொல், உயர்திணை, பெண்பால், படர்க்கை, எதிர்காலம் ஆகிய வற்றை ஒருங்கே உணர்த்துகிறது. இவ்வாறு திணை, பால், இடம், காலம் என்பனவற்றை ஒருங்கே உணர்த்தும் சிறப்பு வடமொழி யிலும் காணப்படவில்லை. வேறு எம்மொழியிலும் காணப்படவில்லை.

*(11)* பிறமொழிக் கலப்பின்றித் தனித்து விளங்கும் உயர் தனிச் செம்மொழி தமிழ் ஒன்றே. அப்படியே பிறமொழிச் சொற்கள் சில வந்து தமிழில் வழங்கினாலும் அவற்றை 'வடசொல்' 'திசைச் சொல்' என்று தனியாகப் பிரித்தே பேசுகிறது தமிழ் இலக்கணம். வேறு எம்மொழியிலும் பிறமொழிச் சொற்களை இப்படிப் பிரித்து வைத்துப் பேசும் வழக்கு இல்லை.

*(12)* மூச்சுக்காற்று மிகுதியாகச் செலவாவதால் வாழ்நாள் குறைகிறது; மூச்சுக் காற்றின் செலவு குறைவதால் வாழ்நாள் மிகுதி யாகிறது என்னும் அறிவியல் உண்மையைப் புன்னெடுங் காலத் திற்கு முன்னமே உணர்ந்தவர்கள் தமிழர்கள். எனவே அவர்க ளுடைய மொழி உயிர்ப்புச்செட்டு உடையதாக இருக்கிறது

எவ்வளவு குறைந்த மூச்சுக் காற்றின் செலவில் ஒருவர்க்கொருவர் உரையாட முடியுமோ அவ்வளவு உயிர்ப்புச்செட்டு உடையமொழி தமிழ் ஒன்றே. வடமொழியில் இத்தகைய உயிர்ப்புச்செட்டு இல்லை என்பது வெளிப்படை.

*(13)* 'அவர் வந்தார்' என்று ஒருவரைப் பலர் பாலால் வழங்கும் உயர்வு சிறப்பு என்னும் அழகு தமிழ் மொழிக்கே உரியது. இந்த அழகு வடமொழியிலும் இல்லை. ஆங்கிலத்திலும் இல்லை. (ஆங்கிலத்தில் அவன் வந்தான் என்றாலும் He Came தான். அவர் வந்தார் என்றாலும் He Came தான்.)

*(14)* ஒரு பொருள் பலநிலை எய்தி வருகின்றபோது ஒவ்வொரு நிலையிலும் ஒரு தனிப் பெயர் பெறுவது தமிழ் மொழியில் தான். பிறமொழியில் இல்லை. பூ என்னும் ஒரு பொருள் அதன் பலநிலைகளில் – தோற்றம், வளர்ச்சி, மலர்ச்சி, வீழ்ச்சி என்னும் நிலைகளில்—அரும்பு, மொக்கு, அலர், மலர், வீ என்று தமிழில் பல பெயர்களைப் பெறுவது போல் வடமொழியிலோ பிறமொழியிலோ பெறுவதாகக் காணோம் (மிகவும் வளர்ச்சியடைந்த மொழியென்றும், உலகமெல்லாம் பரவியுள்ள மொழி என்றும் சொல்லப் படும் ஆங்கிலத்தில் 'காய்' என்பதைக் குறிக்க ஒரு சொல் இல்லை என்பது நினைவு கூரத் தக்கது. பழுக்காத பழம் என்று பொருள் படும் Unripe Fruit என்றே ஆங்கிலம் காயைக் குறிக்கிறது.)

இத்தகைய பல்வேறு தனிச் சிறப்புகளையுடைய தமிழ் உயர்ந்த மொழியா? இந்தச் சிறப்புகள் எவையுமில்லாத ஆரியம் உயர்ந்த மொழியா? பாரதியார் சொல்கிறாரே உயர் ஆரியத்திற்கு நிகராகத் தமிழ் வாழ்ந்தது என்று!

(தொடரும்)

## இலங்கையிலும் தூய தமிழ்க் குரலொலி

"அனைத்து மொழிகளுக்கும் மூத்த மொழியான தமிழில் பிற மொழிகளைக் கலக்க விடாது, தூய தமிழ் உலகெங்கும் நல்ல முறையில் வளர்ச்சி பெற்றோங்க எல்லோரும் ஈடுபட்டுழைக்க முன் வருதல் வேண்டும்" என்று அனைத்திலங்கை இந்துமத குருபீடத் துறவிகள் திருக்கூட்டத்தின் நிறுவனர் தவத்திரு **சிவகுரு அடிகள்** வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்படி துறவிகள் திருக்கூட்டத்தின் 28-ஆவது ஆண்டு அறிக்கையில் தவத்திரு அடிகளார் மேற்படி வேண்டுகோளை விடுத்திருந்தார்.

**—இலங்கை-வீரகேசரி. 11-7-79.**

# அடிமையாய் வாழுவதோ-நம் ஆண்மையும் தாழுவதோ?

சிங்கை—கல்லாடன்

வஞ்ச மனத்தவர் வாழ்ந்து மகிழ்வதும்
வாழ்வுக் குரியவர் தாழ்ந்து கிடப்பதும்
நெஞ்சம் குளிர்ந்திடப் போகுமோ !—தமிழ்
நெஞ்சக் கொதிப்பென்று தீருமோ? தெருவில்
எஞ்சிக் கிடந்திடும் எச்சிலைச் சோற்றுக்கே
என்னினம் வாழுவதாய்,—பிறர், நமை
எள்ளிடத் தாழுவதோ! நமைக்கண்(டு)
அஞ்சிய கோழையர் ஆண்டிட நாமிவண்
அடிமையாய் வாழுவதோ!—நம்
ஆண்மையும் தாழுவதோ!

வாழ்ந்த இனத்தவர் வாழ்வை அழித்துமே
வந்து நுழைந்தவர் வாழ்ந்து மகிழ்வதை
ஊழ்வினை என்றுநாம் எண்ணுவதோ!—தமிழ்
உணர்விலை என்றுதான் நண்ணுவதோ!—தெரு
வாழ்விலை யாயினும் தாழ்வை நினைத்திலர்
வண்டமிழ்த் தாயினமே!—நீ, தெரு
வாழ்ந்திடும் நாயினமே! நம்மினத்
தாழ்வை நினைத்திடின் தணலென நெஞ்சமே
தானிங்கு வேகையிலே —பிறர்
தாள்தொட்டு வாழுவதோ!

அன்புசெய் என்றுமே அண்டியே வந்தவர்
ஆமையாய் நமக்கே அடங்கிக் கிடந்தவர்
அன்னை நிலந்தினை ஆளுவதோ!—தமிழ்
அன்னை புகழ்நிலை தாழுவதோ? மானம்
இன்றிலை நெஞ்சினில் இனியிலை ஒற்றுமை
என்றுதான் பேசுவதோ,—புகழ்நிலை
எய்திடக் கூசுவதோ! நம்மோர்
நன்னிலைக் கேகினுல் நலிவு தமக்கெனும்
நரிகளுக் கஞ்சுவதோ—நீ, சொரி
நாய்களைக் கெஞ்சுவதோ!

# ஈழத்துத் தமிழ்த் தேசிய இனமும் தீவின் இடதுசாரி இயக்கங்களும்

—தெ. மொழி நலங்கிள்ளி

இலங்கைத் தீவில் பொதுவுடமை இயக்கங்கள் பல்வேறு கூறுகளாகச் சிதறிக் கிடக்கின்றன. தமிழ், சிங்களத் தேசியத் இனங்களுக்கிடையிலுள்ள சிக்கல்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான கருத்துகளை வெளியிட்டு வந்திருப்பதோடு காலத்திற்குக் காலம் தமது கருத்துகளை மாற்றிக் கொண்டும்-குழம்பியும்-குழப்பியும் வந்திருக்கிறார்கள்.

தீவில் ஒரு சமநிலைக் குமுகாய அமைப்பு ஏற்பட்டால் எல்லாச் சிக்கல்களும் தீர்ந்துவிடும் என்ற குரலை மட்டுமே மாற்றிக் கொள்ளாமல் கடந்த காலங்களிலும் தற்போதும் எழுப்பி வரும் இவர்கள் அதற்காக நடைமுறையில் என்ன செய்துள்ளார்கள்; என்ன வேலைத் திட்டங்களை வைத்துள்ளார்கள் என்று பார்க்கும் போது ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களின் நடைமுறைகளோ-இந்த இரு தேசிய இனச் சிக்கலில் ஏனைய பிற்போக்கு வலப்பொது இயக்கங்களின் நடைமுறைகளோடு ஒட்டியே வந்துள்ளன

இனத்தை இனம் சுரண்டுவது உட்பட அத்தனைச் சுரண்டல்களையும் ஒழிப்பதாகிய சமநிலைக் குமுகாய அமைப்பு பகுஇன (வர்க்க)ப் போராட்டத்தின் மூலமே உருவாகிறது. தமிழ், சிங்களத் தேசிய இனங்களின் சமத்துவம் நிலைநாட்டப்படுவதன் மூலமே தீவில் பகுஇனப் போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியும். ஆனால் தமிழ், சிங்களப் பாட்டாளிகளிடையே உணர்வு நிலையான ஒற்றுமை நிலவிடவில்லை.

இரண்டு இனங்களைச் சார்ந்த பாட்டாளிகளை ஆளும் இனத்தவர் ஒரே வண்ணமாகச் சுரண்டுகின்ற போதிலும் தீவில் தமிழ்ப் பாட்டாளியின் மதிப்பும், மொழியுரிமை, சமய உரிமை உட்படப் பண்பாட்டு நிலைகளில் ஒடுக்கப்பட்டுள்ள தன்மைகளும், இரண்டு இனங்களின் பாட்டாளி இன ஒற்றுமை என்பதைப் பகற்கனவாக எழவைத்துள்ளது. இதை இடப் பொது இயக்கங்கள் சரிவர உணர்ந்ததாகத் தெரியவில்லை.

இன ஒடுக்குமுறைக்கு எதிரான குரலை அவர்கள் ஓங்கி ஒலிக்கவில்லை. "தேசிய நயனின்மை போன்று வேறெதுவும் பாட்டாளி இனத் தோழமையின் வளர்ச்சியையும், அது வலுப்பெறுவதையும் தடுத்து நிறுத்த முடியாது" என்ற இலெனின் கூற்றை முழுக்க உணர்ந்ததாகத் தெரியவில்லை. தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளத் தயங்கும் இவர்கள் தமிழ்த் தேசிய இனத்தைச் 'சிறுபான்மைத் தமிழினம்' 'தமிழ் பேசும் இனம்' என்றே குறிப்பிட்டு வருகிறார்கள்.

'ஒடுக்கப்படும் இனத்தின் தேசியத் தருக்கம் ஒடுக்குமுறைக்கு எதிரானது என்பதால் குடியரசுத் தன்மை கொண்டிருக்கிற காரணியத்தால் மார்க்சியத்தார் அதற்குத் தடையேதுமற்ற முழு ஒத்துழைப்பை நல்கவேண்டும்' என்ற இலெனினியக் கருத்துகளைப் புறக்கணித்து ஒடுக்கும் சிங்களரின் தேசியத் தருக்கத்தையும், ஒடுக்கப்படும் தமிழரின் தேசியத் தருக்கத்தையும் ஒன்றிற் கொன்று நிகரானதே என்று கூறித் தமது இலெனினியத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

தீவு வெள்ளையரிடமிருந்து அரசியல் விடுதலை பெறுவதற்கு முந்தைக் காலங்களில் விரும்பினல் தமிழ்த் தேசிய இனம் தமக்கென ஓர் உரிமையான அரசை அமைத்தல் உட்பட 'தன் அமைப்பு உரிமை' ஏற்கப்படல் வேண்டும் என்றனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற இலங்கைப் பொதுவுடைமைக் கட்சியின் 10-ஆவது பேராயம் ஒன்றுபட்ட இலங்கை அரசியல் அமைப்பிற்குள் மாநிலத் தன்னாட்சி அடிப்படையில் தமிழர்களுக்குத் தன்னமைப்பு உரிமையை அளித்திடல் வேண்டும் என்று வெளிப் படுத்தியது.

இலங்கைப் பொதுவுடைமை இயக்கத்தின் பொதுச் செயலரான தோழர் பீட்டர் கெனமன், "தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளக்கூடிய வகையில் அவர்களின் தன் அமைப்பு உரிமையை அவர்களுக்கு வழங்க வேண்டும். அதே நேரம் இந்த நாட்டைப் பிரிக்க அனுமதிக்கக்கூடாது பிரிவினையை நாம் எதிர்க்கிறோம்' என்று அண்மையில் கூறியிருக்கிறார்.

தன் அமைப்பு உரிமை பற்றி இலெனின் குறிப்பிடும்போது 'மார்க்சிய வேலைத் திட்டத்தில் இனங்களின் தன் அமைப்பு உரிமை எனப்படுவது வரலாற்றுப் பொருளியல் கண்ணோட்டத்தின்படி அரசியல் தன் அமைப்பு உரிமையை, உரிமையுள்ள அரசை, தேசிய அரசு ஒன்று அமைப்பதைத் தவிர வேறெதையும் குறிக்க முடியாது' என்றார்.

இலங்கைப் பொதுவுடைமை இயக்கத்தின் 10-ஆவது பேராயமும் தோழர் பீட்டர் கெனமனும் தன் அமைப்பு உரிமைக்குக் கொடுத்துள்ள விளக்கம் இலெனினியத்திற்கு முரண்பாடாக உள்ளது.

அதே வேளையில் எட்வின் சமரக்கொடி என்ற பழம் பெரும் மார்க்சியத் தலைவர், 'தமிழர்கள் தங்களுக்கென தனி நாடு கோருவதை நாங்கள் மறுக்க முடியாது. ஏனெனில் அவர்கள் இதுவரை இரண்டாந்தரக் குடிமக்களாகவே நடத்தப்பட்டு வந்துள்ளனர். அவர்கள் கோரும் தனி நாட்டுக் கோரிக்கையை நிறைவேற்றி

வைப்பதுதான் எங்கள் கடமை. அதைவிட்டுத் தனி நாடாகப் பிரிந்து சென்று பின் தமிழர்கள் எவ்வாறு தங்கள் நாட்டை ஆளப் போகிறார்கள் என்பது எங்கள் கவலையாக இருக்கக்கூடாது'' என்று கூறியிருக்கிறார்.

1948-ஆம் ஆண்டு மலைநாட்டுத் தமிழ் மக்களின் குடியுரிமையும் ஒப்போலை உரிமையையும் பறித்திடும் சட்டங்கள் வந்தபோது அவற்றை எதிர்த்து, 'இந்தத் தீவில் ஐந்து ஆண்டுகள் வாழ்ந்த அனைவருக்கும் குடியுரிமை அளிக்கப்பட வேண்டும்' என்று முழங்கிய இடதுசாரித் தலைவர் என். எம். பெரோராதான் 1971ஆம் ஆண்டின் இடதுசாரி ஒற்றுமை முன்னணி அமைச்சில் அமைச்சரானபோது 'ஆண்டுக்கு 50,000 தோட்டத் தமிழ்ப் பாட்டாளிகளை வெளியேற்றியே தீருவேன்' என்று கொக்கரித்தார்.

தீவின் விடுதலைக்கு முன்பும், விடுதலை அடைந்த காலங்களிலும், சிங்களத்துடன் தமிழுக்கும் சம உரிமை கேட்ட இடதுசாரிகள்-சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்ற சட்டத்தைக் காலஞ்சென்ற பண்டாரநாயகா கொண்டு வந்தபோது, அதை நாடாளுமன்றத்தில் மிகக் கடுமையாக எதிர்த்து, "Dear Mr. Bandaranayaka weather you want one state with two language or two states with one language'' என்று கேட்டவர்கள் தமிழ் மொழிக்குச் சில சலுகைகள் அளிப்பதற்காக 1966 சனவரி 8-ஆம் நாள் யு. என். பி. அரசு நாடாளுமன்றத்தில் ஓர் அறிக்கையைக் கொணர்ந்த நேரத்தில் அதற்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தினார்கள்.

1957 ஆம் ஆண்டு தமிழ் மாநிலங்களுக்கு 'மாநிலத் தன்னாட்சி' வழங்கக்கூடிய 'மாநில சபைகளைப் பெறும் நோக்குடன் காலஞ்சென்ற தலைவர்கள் திரு. பண்டாரநாயகாவும், திரு. செல்வநாயகமும் உடன்படிக்கை செய்தபோது அவ்வுடன்படிக்கையை எதிர்த்தார்கள். பின்னர் மூன்றாண்டுகளுக்குப்பின் 1960-இல் 'மாநிலத் தன்னாட்சி'க் கொள்கையை ஏற்றுத் தங்கள் தேர்தல் அறிக்கையிலும் வைத்து முழங்கினார்கள்.

1965-இல் யு. என். பி. அரசாட்சியின் மூலம் மாவட்ட சபைகளை நிறுவிடத் தமிழரசுக் கட்சி முயன்றபோது மாவட்ட சபைகள் நாட்டைப் பிரித்துவிடும் என்று கூறி, வகுப்பு வெறியர்களுடன் கூட்டு சேர்ந்து, தமிழர்களைக் கிண்டலும் பகடியும் செய்யும் முகத்தான், தோசை, வடைகளைத் தலையில் சுமந்து ஊர்வலம் நடத்தினார்கள். 'மே நாள்' ஊர்வலத்திலும் இது நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. பின் 1977-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழ்ப் பகுதிகளில் மாவட்ட சபைகள் அமைந்திட வேண்டும் என்பதைத் தேர்தல் அறிக்கையில் முன்வைத்து முழங்கினார்கள்.

1970-இல் இவர்களும் இணைந்து நடத்திய 'இடதுசாரி ஒற்றுமை முன்னணி அரசு' தமிழ் மாணவர்களின் உயர் கல்வியைப் பறித்த இனவாரித்தரப்படுத்தல் சட்டத்தையும், தமிழர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக்கிய புதிய அரசியல் சட்டத்தையும் கொண்டு வந்தது. தமிழுக்கு உரிமை எதுவும் தரக்கூடாது என்று இனவெறிக் கூச்சல்களுடன் காவல்துறையின் தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தியதால் எசு. டி. சேனநாயகா அரசுக் காலத்தில் வேட்டெஃகத்திற்கு இரையான புத்தபிக்கு ஒருவனுக்கு நினைவு இலச்சனை எழுப்பித் தமிழனையும் தமிழையும் எதிர்த்த அந்த வகுப்பு வெறியனை நாட்டுப் பற்றாளன் மொழிகாத்த வீரன், சமநிலைக்காரன் என்றெல்லாம் போற்றிப் புகழ்த்தார்கள், இடதுசாரி இயக்கத் தலைவர்களான தோழர்கள் என் எம். பெரேராவும், பீட்டர் கெனமனும்.

இவ்வாறாகத் தமிழ்த் தேசிய இனச் சிக்கலில் தீவின் இடதுசாரிகள் கடந்த காலங்களில் நடந்து கொண்ட போதிலும் இவர்களின் நடவடிக்கைகளில் பாடம் பெற்று எது சரியான மார்க்சீய பாதை என்பதை அறிந்து-உணர்ந்து உருவாகியுள்ள ஈழத்தின் இளைய தலைமுறை தமது தாயகத்தை மீட்கும் போராட்டத்தை முறையாக முன்னெடுத்துச் செல்கிறது. அவர்களுக்குத் துணை செய்யும் வண்ணம் சிங்கள நாட்டு இளம் இடதுசாரிகள் சிலர் எடுத்துவரும் நிலைப்பாடும் உலகின் முற்போக்கு ஆற்றல்களுக்கு விடுதலை விரும்பிகளுக்கு மகிழ்ச்சி தருவதாக உள்ளது.

தீவின் ஏனைய இடதுசாரிகளும் தமது கடந்த காலத் தவறுகளைத் திருத்திக்கொண்டு, உண்மையான இடதுசாரிகளாக-மார்க்சியப் பாதையில் நடைபோடுவார்கள்; இன ஒடுக்குமுறைக்கு எதிராக முறையான ஒரு போராட்டத்தை நடத்துவார்கள்; தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகள் நிலைநாட்டப்படத் துணை நிற்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.

1867-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 2 ஆம் நாள் அயர்லாந்துச் சிக்கல் பற்றிக் காரல் மார்க்சு அவர்கள் ஏங்கெல்சுக்கு எழுதிய ஒரு மடலில் 'இங்கிலாந்திலிருந்து அயர்லாந்து பிரிந்து செல்வது உண்மையற்றது என முன்பு நான் கருதினேன். இப்பொழுது அது தவிர்க்க முடியாதது எனக் கருதுகிறேன். பிரிவினைக்குப்பின் இணைப்பு ஏற்படக்கூடும் என்ற போதிலும்....' எனக் குறிப்பிட்டுள்ள குறிப்பை இலங்கைத் தீவின் இந்த இடதுசாரிகள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழகத்துக்கு இடதுசாரிகளுக்கும் இந்தக் குறிப்பு பொருந்தும்.

# சிங்கப்பூரில் தமிழ் ஆளவில்லை-மாள்கிறது!

## கிழக்கே போனது கிணற்றுத் தவளையேதான்!

### குரும்பூர் குப்புசாமிக்குக் கனகரத்தினம் சாட்டை

(தமிழக எழுத்தாளரான குரும்பூர் குப்புசாமி எழுதிய "கிழக்கே போன கிணற்றுத்தவளை" என்ற நூலிலிருந்து சில பகுதிகளுக்கு மாறுபட்ட கருத்தை உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க நிறுவனர் குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் இங்கே தருகிறார். கட்டுரை இலங்கை 'சுதந்திரன்' 19-8-79 இதழில் வெளிவந்தது.)

தமிழகத்து எழுத்தாளர்களுக்கு ஒரு துணிவு இருக்கிறது!— ஒரு போலி நம்பிக்கை அவர்களிடையே மேலோங்கி நிற்கிறது! தாம் எண்ணுவது எழுதுவது எல்லாமே சரியானது, நயமானது, முடிவானது, அதனை வெட்டி எழுத, மறுப்புத் தர தமிழ் உலகில் எவருமே கிடையாது என்பதுதான் அது! இவர்களின் இந்த எண்ணத்தை வளர்ப்பது போல், இந்தப் போலித்தனத்துக்குத் துணை போவது பெரும் வெட்கக்கேடு! இதனால்தான் நாம் 15 ஆண்டுகள் பின் தங்கி யுள்ளோம்; இலங்கை இலக்கியப் படைப்புகளுக்கு அடிக் குறிப்புகள் தேவை என வெளிப்படையாக நம்மிடையே வந்து கருத்துத் தெரிவிக்கவும் துணிந்து திரைப்படச் செய்திகளைத் தம் ஏடுகளிலே திணித்து இங்கு அனுப்பி, ஈழத்து எழுச்சியுற்ற மாணவ மணிகளையும் சாக்கடையில் தள்ள இவர்களால் முடிகிறது! ஒரு சிறு எடுத்துக்காட்டு போதும்.— "இதயம் பேசுகிறது" ஏட்டின் ஆசிரியர் திரு மணியன் தமது இலங்கைச் செலவு பற்றித் தொடர் கட்டுரை வரைந்ததை நம்மில் பலர் படித்திருப்பார்கள். அதைப்படித்தபின், இந்த ஆள் இன்னும் நான்கு தடவையாவது இலங்கை வந்தால் தான் இலங்கைத் தமிழர் பற்றி ஓரளவாவது புரிந்து சரியாக எழுது வார் என எண்ணத் தோன்றியது!

சிங்கப்பூரில் தமிழ் மொழியும் ஆட்சி மொழிகளில் ஒன்றாக இருப்பதையிட்டு உண்மையில் நாம் திரு லீ அவர்களைப் பாராட்டத் தான் வேண்டும். அங்குள்ள சிறுபான்மை மக்களுள் சிறுபான்மை யினரான இலங்கைத் தமிழர் பற்றியும் அவர்களது விடா உழைப் பினைப் பற்றியு ர திற மக்கு, கொடுக்கப்பட வேண்டிய மதிப்பைப் பற்றியும் 1967-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ஆம் நாள் லீ அவர்கள் தந்திட்ட கருத்தை அப்படியே தருவதாயின்,

"....In Singapore today, the Speaker of our Parliament is a Ceylonese, so is our High Commissioner in Great Britain. So is our foreign minister. In the Judiciary in the Civil service, in the University, in the medical service and in

the professions they continue to make substantial contributions out of all proportion to their numbers. They are there not because they are members of a minority community but on the basis of merit. The point is that the Ceylonese are holding their own in open competition with communities far larger than them. They have asked for no special favour or consideration as a minority. What they have asked for—and quite rightly. is that they should be judged on their merits and that they be allowed to compete with all other citizens fairly and without discrimination. This as far as the Singapore Government is concerned, is what is best for all of us. I believe that the future belongs to that society which acknowledges and rewards ability, drive and high performance without regard to race, language or religion...."

இப்படி அன்று கருத்துத் தெரிவித்த லீ அவர்கள், தமிழ் மொழியையும் ஆட்சி மொழியாக்கிச் சிறுபான்மையோருக்கும் பெருமை தந்த லீ அவர்கள்'' காலப்போக்கில் மலாய் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளுமே ஆட்சி மொழியாக இருக்கும்'' என எச்சரிக்கை சங்கு முழக்கியுள்ளார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அரசு தந்துள்ள தமிழ் மொழி பயன்படுத்தும் என்ற மாபெரும் உரிமையைத் தட்டிக் கழித்துவிட்டு ஆங்கிலத்தையே கட்டிப்பிடித்துக் கொண்டு வாழும் சிங்கைத் தமிழர்களின் இன்றைய போக்கு உறுதியாக லீயின் திட்டத்துக்குத் துணைபோவது போலத் தான் ஆகும், புத்த கோவிலில் பிள்ளையார் உருவம் இருப்பது. தமிழில் ஒரு சில அறிவிப்புப்பலகைகள் ஆங்காங்கே வைத்திருப்பது சிங்கப்பூரில் மட்டுமன்று—இலங்கையிலும் தான் இருக்கிறது! இதனைக் கொண்டு "ஆகா! இலங்கையில் தமிழ் கோலோச்சுகிறது'' என எந்த முட்டாளும் கூற முன்வரமாட்டான். இதோ சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் 'தமிழ் மலர்' ஏட்டின் 20-11-78 இதழில் தீவின் இன்றைய தமிழ்க் கல்வி நிலைபற்றி வெளிவந்துள்ள செய்திகள் சில;

"—குடியரசில் 524 பள்ளிகள் உள்ளன இவற்றுள் 376 தொடக்கப் பள்ளிகள். 148 உயர் நிலைப்பள்ளிகள், மொத்தம் 376, தொடக்கப் பள்ளிகளில் 305 பள்ளிகள் தமிழ் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படவில்லை; மொத்தம் 148 உயர் நிலைப்பள்ளிகளில் 143 பள்ளிகளில் தமிழ் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படவில்லை; அரசாங்க உதவி பெறும் 174 பள்ளிகளில் 172 பள்ளிகளில் தமிழ் இரண்டாம் மொழியாகப் கற்பிக்கப்படவில்லை; திருமடப் பள்ளிகளில் ஒன்றுகூட தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்க

முன்வரவில்லை! இஃது அங்குள்ள தமிழர்களின் மனத்தில் ஒரு கவலையை ஊட்டியுள்ளது.

## தமிழரின் குறைகள் நீங்குவது எக்காலம்?

எல்லாப் பள்ளிகளிலும் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகப் பயில வாய்ப்பிருந்தால் பெரும்பாலும் எல்லா இந்தியப் பிள்ளைகளும் தமிழையே இரண்டாம் மொழியாகப் பயிலும். இந்நிலை இல்லாததால் மாணவர்கள் அங்கு மலாய் மொழியை இரண்டாம் மொழியாகப் பயில்கின்றனர். இதன் காரணமாகத் தொடக்கப் பள்ளிகளிற்பயிலும் ஏறத்தாழ 22000 தமிழ்ப்பிள்ளைகளில் 11000 பிள்ளைகள் தமிழைப் பயில முடியாதுள்ளது.

உயர்நிலைப் பள்ளிகளில் ஏறத்தாழ 13000 தமிழ்ப் பிள்ளைகள் பயின்றாலும், ஏறத்தாழ 550 மாணவர்கள் மட்டுமே தமிழைப் பயிலுகின்றனர். உயர் நிலைப்பள்ளிகளிலுள்ள மொழிப் பயிற்சி நடுவங்களில் ஏறத்தாழ 4060 மாணவர்கள் தமிழைப் பயிலுகின்றனர்"

சிறுபான்மை மக்கள் பற்றிச் சிறந்த எண்ணத்தைத் தூண்டும் கருத்துகளை ஆணித்தரமாகக் கூறி வரும் சிங்கைப் பிரதமர் லீ கூவான் யூ ஆட்சியில் தமிழ் மொழியின் நிலை, தமிழ்ப் பள்ளிகளின் நிலைபற்றி அறிந்தோம். இதோ கொழும்புத் திட்டத்தின்கீழ் சிங்கப்பூர் தமிழ்க் கல்விபற்றி ஆராய்ந்து அறிக்கை கொடுக்க அங்குச் சென்ற திரு. கோவிந்தசாமி என்பவர் தந்துள்ள அறிக்கையின் ஒரு பகுதி :

"சிங்கப்பூரில் தமிழ்க் கல்விக்குப் பொறுப்பேற்றிருப்பவர்கள் தமிழை வழக்கில் உள்ள வாழும் மொழியாக—உயிரோடிருக்கும் மொழியாகக் கற்பிக்கப்பட வேண்டியதன் தேவையை உணரத் தவறி விட்டனர். ஆக, இயல்பாகவே சிங்கப்பூரில் தமிழ் செத்துக் கொண்டிருக்கிறது! சாவைத் தடுக்க முடியாவிட்டாலும் சாவு காலத்தையாவது நீடிப்பதொன்றுதான் நாம் செய்ய முடிந்தது"

எனவே குரும்பூராரே! நீங்கள் கிணற்றுத்தவளையாக இருந்து விட்டுப்போங்கள்! உலகத் தமிழரின் இன்றைய நிலைபற்றித் தீவிரமாகச் சிந்தித்துச் செயற்படும் இலங்கை வாழ் தமிழர்களையும் உங்கள் எழுத்துமூலம் கிணற்றுத் தவளைகளாக்கி விடாதீர்கள் எனப் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

---

### அன்பர்கள் கவனிக்க

பொறுப்பாசிரியர் அவர்களை-வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், **காரி, ஞாயிறு** ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள். வெளியூர் அன்பர்கள் முன் கூட்டியே எழுதி விடை பெற்றுக் கொண்டு வர வேண்டும். **அமைச்சர்**

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

**3. கொற்கைத் தமிழ்க் கழகம், ஏரல் – இரண்டாம் ஆண்டு நிறைவு விழா :**

நெல்லை மாவட்டத்தில், ஏரலில் 'கொற்கைத் தமிழ்ச் சங்கம்' என்னும் பெயரில், கடந்த 16-9-77 அன்று ஒரு தமிழ் மாமன்றம் தோற்றுவிக்கப் பெற்றது. குறள்நெறி பரப்புதல், ஞாயிறு தோறும் இலக்கியக் கூட்டம் நடத்துதல், இலவய மாலை நேரச் செந்தமிழ்க் கல்லூரி வழித் தமிழ் வகுப்புகள் நடத்துதல் முதலிய அருந்தனித் தமிழ்த் தொண்டாற்றும், அச்சங்கத்தின் சிறப்புத் தலைவராக மொழி ஞாயிறு **ஞா. தேவநேயப் பாவாணர்** அவர்கள் அமர்த்தப் பெற்றுள்ளார்கள். இதன் தலைவர் முதுபெரும் புலவர், **ச. சிவசங்கு** அவர்கள். துணைத் தலைவர் புலவர். **சங்கர பொன்னம்பலம்** அவர்கள். செயலர் புலவர். **க. ஐயாத்துரை** க. மு. அவர்கள். மற்றும் காப்பாளர், பொருளாளர், துணைச் செயலர், செயலவை உறுப்பினர்கள் ஆகியோர் வழி, இக்கழகம் நெல்லை மாவட்டத்தி லேயே சிறப்பான தமிழ்த்தொண்டு செய்து வருகிறது. இக்கழகத் தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா கடந்த 10-8-79 முதல் 12-8-79 முடிய ஆகிய மூன்று நாள் விழா நிகழ்ச்சிகளாக முதுசெம் பாவலர் திரு மிகு. **பெருஞ்சித்திரனார்** அவர்கள் தலைமையில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. முதல் நாளில் மாணவர் அரங்கப் போட்டிகளும், சிறப்புப் பேருரைகளும், இரண்டாவது நாள் நிகழ்ச்சி களாக வழக்காடு மன்றமும், நாழிகை நல்லுரையும், முதுசெம் பாவலர் திரு. **பெருஞ்சித்திரனார்** தலைமையில், 'பாரதிதாசன் பாக்களில் சிறந்து மிளிர்வது குமுகாய உணர்வா, தமிழுணர்வா' என்னுந் தலைப்பில் பட்டிமன்றமும் நடைபெற்றன. பட்டிமன்றத்தில் 'குமுகாய உணர்வே' என்னுங் கருத்தில், திரு. **யா. பாக்கியராசு** க. மு. அவர்கள் தலைமையில் திரு. **இல அரவேந்தன்** புலவர். திருவாட்டி **சித்திராதேவி** ஆகியோரும், 'தமிழுணர்வே' என்னும் கருத்தில் புலவர். திரு. **பழனி. கிருட்டிணன்** க. மு. அவர்கள் தலைமையில், புலவர். திரு. **பாக்கியம்** க. இ., திருவாட்டி. **மு. ஆறுமுகம் அம்மையார்** க. இ; ப. இ. ஆகியோரும் அளவை யாடினர். தலைவர் தம் தீர்ப்புரையில் 'குமுகாய உணர்வும்' 'தமிழுணர்வும்' பாவேந்தரின் இரண்டு கண்களாகவும், உடலும் உயிருமாகவும் இருந்து செயல்பட்டதை, அவரின் பாடல்களை எடுத் துக்காட்டி விளக்கினார். நிகழ்ச்சி புலவர். திரு. **சங்கர. பொன்னம் பலம்** அவர்களின் நன்றியுரையுடன் இரவு 2 மணியளவில் நிறை வுற்றது.

கழகத்தின் மூன்றும் நாள் நிகழ்ச்சி 12-8-79 அன்று மாலை 7-30 மணியளவில் தொடங்கியது. கழகச் செயலர் புலவர் திரு. **க. ஐயாத்துரை** க. மு. அறிக்கை படித்தார். தொடக்கவுரை

திரு. **சிவசங்கர பாண்டியன்**. வணி. இ. அவர்களால் நிகழ்த்தப் பெற்றது. திரு. **செல்வராசு** க. மு. ப. இ. வாழ்த்துரை வழங்கினார். முதுபெரும் புலவர் திரு. ச. **சிவசங்கு** கழகத் தோற்றச் செயற்பாடு களைக் கூறித் தலைவர்களை வரவேற்றுப் பேசினார். அதன் பின்னர் சித்தோடு பாவலர் திரு. **குமர நடவரச ஈவப்பனார்** அவர்கள் கழகத்தை வாழ்த்தியும் பாவலரேறு அவர்களின் தமிழாற்றலை மக்களுக்கு விளக்கியும் ஓர் அருமையான உரையாற்றினார்கள். அடுத்து பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** 'தமிழா! உன் நிலை இதுவா?' என்னுந் தலைப்பில் இரண்டரை மணி நேரம் அரியதோர் உணர்வுரையாற்றினார். இவ்வுரை அவ்வூர் மக்கள் உள்ளங்களில் மிகக் கிளர்ச்சியையும் எழுச்சியையும் தனித் தமிழ்ப் பற்றையும் தோற்றுவித்தது என்று கூறுவது மிகையாகாது. அதற்கு எடுத்துக் காட்டாக, **பாவலரேறு** அவர்கள் உரை நிகழ்த்திக்கொண்டிருக்கும் பொழுதே, அவர் உரையைக் கேட்டுக்கொண்டிருந்த அவ்வூர்ப் பெருமக்கள் சிலர் அந்த நள்ளிரவில் தலைக்குச் சில உருபாக்களாகத் தொகை திரட்டி, அடைக்கப் பெற்ற சவளிக்கடை ஒன்றினையும் திறக்கச் சொல்லி, உருபா எழுபது மதிப்புள்ள வெண்பட்டாடை ஒன்றை உடனே வாங்கி வரச் செய்து, புலவர் திரு **பழநி கிருட்டிணன்** க. மு. அவர்களைக் கொண்டு போர்த்தச் செய்ததும், அவ்வருந்தமிழ்ப் புலவர், பாவலரேறு அவர்களைக் கழகக் காலப் பெரும் புலவர் வரிசையில் நிறுத்திப் பெருமையுறப் போற்றி வாழ்த்தியதையும் குறிப்பிடல் வேண்டும்.

அடுத்து, அன்றைய, நிறைவு நாள் இறுதி நிகழ்ச்சியாக புலவர். திரு. **பழநி. கிருட்டிணன்** க மு. அவர்களை நடுவராகக் கொண்டு, 'வில்லாலும், சொல்லாலும், இல்லாலும் இராமன் செயல்கள் குற்றம்' என்னும் தலைப்பில் 'அறங்கூறவையம்' நிகழ்ச்சி நடந்தது. புலவர் திரு. **வீ. செந்தில் நாயகம்**, இல. இ. திரு. **மாடசாமி** ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியாகப் புலவர் திரு. **சத்தியசீலன்** க. இ. அவர்கள் நன்றியுடன் இரவு 3 மணியளவில் விழா இனிதே நிறைவுற்றது.

பாவலரேறு அவர்கள் கொற்கைத் தமிழ்ச் சங்கத் தலைவர் அவர் களிடமும் துணைத் தலைவர், செயலர், உறுப்பினர்கள் ஆகியோரிட மும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, 'கொற்கைத் தமிழ்ச் சங்கம்' என்னும் பெயரில் இரண்டாண்டுகள் பணியாற்றிவந்த அத் தண்டமிழ்க் கழகம். **'கொற்கைத் தமிழ்க் கழகம்'** எனப் பெயர் மாற்றப் பெற்றுத் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது என்பது குறிப்பிடத் தக்கது.

அடுத்து, பாவலரேறு அவர்களும், அவர்களுடன் திரு. குமர நடவரச ஈவப்பனார் அவர்களும் தங்கியிருந்த நான்கு நாட்களும்

அவர்களுக்கு ஒவ்வொரு நாளும் அன்பு விருந்தோம்பிப் புரந்தும், அவர்களை அருகிலுள்ள திருச்செந்தூர் அழைத்துச் சென்று மகிழ்வித்தும் பாடாற்றிய அன்புப் புலவர்கள் திருவாளர்கள் **ச சிவசங்கு, க. ஐயாத்துரை** க. மு. அவர்களும் குறிப்பாக எந்நேரமும் உழையிருந்து துணை செய்த புலவர் திரு. **சங்கர பொன்னம்பலம்** அவர்களும் பெரிதும் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியராவர்.

கற்கைச் செழும்புலவர் கன்னித் தமிழ்வளர்க்கும்
கொற்கைத் தமிழ்க்கழகம் கூர்ந்த புகழ்வாழி!
செம்புலமை மூத்த சிவசங்கு வாழி; உடன்
அம்புலமை யாரும் அமர்ந்து!

**4 நெல்லை-சிறுத்தொண்டநல்லூர், அரசு மேனிலைப் பள்ளி கலை இலக்கியக் கழக விழா :**

கடந்த 11-8-79-ஆம் நாள் காலை 10-30 மணியளவில் நெல்லை மாவட்டம் சிறுத்தொண்டநல்லூர், அரசு மேனிலைப் பள்ளி, கலை இலக்கிய விழா, தலைமையாசிரியர் திரு. **செல்வராசு** க. மு; பு. இ. அவர்கள் தலைமையில் இனிது நடைபெற்றது. விழாத் தொடக்கத்தில் புலவர் திரு. **ம இராமசாமி** வரவேற்புரை நிகழ்த்தினார். தலைவர் முன்னுரைக்குப்பின் சித்தோடு பாவலர் திரு. **குமர. நடவரச சுவப்பனார்** இன்னுரை யாற்றினார். அவரை யடுத்து பாவலரேறு. **பெருஞ்சித்திரனார்** சிறப்புரையாற்றினார். அவரைத் தொடர்ந்து முதுபுலவர். திரு. **ச சிவசங்கு** நல்லுரையாற்றினார். இறுதியில் புலவர். திரு. **சங்கர. பொன்னம்பலம்** அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவுற்றது.

**5. இலங்கைத் தமிழர் படுகொலைக்கு எதிரான கண்டனப் பொதுக் கூட்டமும்—செயவர்த்தனா கொடுங்கரிசன் எரிப்பும் – புதுவை :**

சென்ற 19-8-79 ஞாயிறு மாலை புதுவை, அண்ணா திடலில்' தன்மானத் தமிழர் இயக்கச் சார்பாக, இலங்கைத் தமிழர் படுகொலைக்கு எதிரான கண்டனப் பொதுக் கூட்டமும், செயவர்த்தனா கொடுங்கரிசன் எரிப்பும் நடைபெற்றன. தொடக்கத்தில் அன்று மாலை 6 மணியளவில், காமராசர் சாலை, பிள்ளைத் தோட்டத்திலிருந்து செயவர்த்தனாவின் கொடுங்கரிசன் படம் செருப்பு மாலையுடனும் எருக்கம்பூ மாலையுடனும் பாடையின் மீது வைக்கப்பெற்று, பெண்களும் ஆண்களும் ஒப்பாரி பாடி உடன் வரவும், மூன்று காவல் துறை வண்டிகளும், ஏராளமான காவல்காரர்களும் புடைசூழவும், தாரை, தப்பட்டையுடன் நேரு சாலை, காந்தி சாலை, இலால் பகதூர் சாத்திரி சாலை வழியாகத் தூக்கி வரப்பெற்று, மாலை 7 மணியளவில் அண்ணா திடலை அடைந்தது. பாடை ஊர்வலத்திற்கு பாவலரேறு.

திரு. **பெருஞ்சித்திரனார்** திரு. **அரு. கோபாலன்,** தன்மானத் தமிழர் இயக்கத் தலைவர் **மு. வேந்தன், திருக்குறள் பெருமாள்** முதலியோர் தலைமை தாங்கினர். பின்னர் 7½ மணியளவில் அண்ணு திடலில் திரு. **மு. வேந்தன்** தலைமையில் திரண்ட பொதுக் கூட்டம் ஒன்று நடந்தது. அதில், இலங்கையில் தமிழர் படு கொலைக்கு ஆளாவதையும் செயவர்த்தன அரசு யாழ்ப்பாணத்தில் நெருக்கடி நிலையைக் கொணர்ந்ததையும், படைத்துறையினரைத் தமிழ் இளைஞர்கள் மேல் ஏவி விட்டதையும் கண்டித்து, திருவாளர்கள் **கலைஞர் அடியான், முத்துக்கண்ணன்**, பேரா. **முத்து. குணசேகரன்** க. மு., **அரு. கோபாலன்** ஆகியோர் நெருப்புரையாற்றினர். இறுதியில் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** அவர்கள், கண்டனக் கூட்டத்தின் நோக்கம் பற்றி எடுத்துரைத்து, இவற்றுக்கெல்லாம் கரணியமாகவுள்ள இலங்கைக் குடியரசுத் தலைவர் செயவர்த்தனவின் உருவப்படத்தை நார் நாராகக் கிழித் தெறியும்படி பொதுமக்களைக் கேட்டுக் கொண்டார்கள். உடனே மேடையின் முன், பாடை மேலிருந்த செயவர்த்தனவின் கொடுங் கரிசன் உருவப்படம் வேகம் கொண்ட பொதுமக்களால் சுக்கல் நூறுகக் கிழித்தெறியப்பட்டதுடன், தீ வைத்தும் கொளுத்தப் பட்டது. இரவு 10-30 மணியளவில் **மா கதிர்ச்சிவன்** நன்றி யுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

## பிற செய்திகளும் நன்கொடைகளும்

### 1 புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசனார் விழா : புதுவை :

கடந்த தி. பி. 2010 ஆடவை 28 (12-7-79)ஆம் பக்கல் புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசனார் விழாவைப் **புதுச்சேரி, தனித் தமிழ்க் கழகம்** நடத்தியது. திரு. சு **தமிழமல்லன்** க. இ. தலைமை தாங்கினர். திருவாளர்கள் சி **தமிழ்மாறன், வழக் கறிஞர் சேரன், திருக்குறள் பெருமாள், பேராசிரியர் முத்து. குணசேகரன்** க. மு. ஆகியோர் உரை நிகழ்த்தினர். பாவலர்கள் **தி பழனிச்சாமி, மன்றவாணன், கோபால்** ஆகி யோர் பாப்பொழிவு செய்தனர். திரு. **தமிழநேயன்** நன்றி கூறினர்.

### 2. திருக்குறள் மன்றம், பல்லடம்—மறைமலையடிகள் பிறந்த நாள் விழா :

கடந்த ஆடவை நக (15-7-79) ஆம் பக்கல், ஞாயிறு முற் பகல் 10 மணியளவில், பல்லடம், மங்கலச் சாலையிலுள்ள இராம கிருட்டிண மடத்தில், பல்லடம் திருக்குறள் மன்றம் சார்பாக, மறைமலையடிகள் பிறந்த நாள் விழா கொண்டாடப் பெற்றது. விழா

விற்குப் பல்லடம் அரசு மேனிலைப் பள்ளி வரலாற்றுசிரியர் திரு. **சு. க இராமசாமி** க. மு.; ப. இ. அவர்கள் தலைமை தாங்கினர். பவானி மேனிலைப் பள்ளி நிலைத்திணைஇயல் ஆசிரியர் திரு. **சி. அறவாணன்** அறி. இ; ப. இ. அவர்கள் 'அடிகளார் ஆராய்ச்சித் திறன்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினர்கள்.

### 3. தமிழக ஈழ பண்பாட்டு மன்றம் கோவை :

கடந்த 17-8-79 அன்று இரவு கோவை, தமிழக ஈழ பண்பாட்டு மன்றத்தின் சார்பில், ஈழத் தமிழ் இன ஒடுக்கல் கண்டனப் பொதுக்கூட்டம். திரு. **கு குமாரசாமி** தலைமையில் நடந்தது. அது சமயம் திருவாளர்கள் **அரு. கோபாலன், கு வெ கி. ஆசான், முத்துக்குமரன், துரைமடங்கன்** முதலியோர் இலங்கையில் தமிழ்ப் பகுதியில் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டிருப்பதைக் கண்டித்தும், அங்குக் குவிக்கப்பட்ட படைத்துறையை அகற்ற வேண்டுமென்றும், அங்குத் தமிழ் இளைஞர்கள் துன்புறுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டுமென்றும், சிங்களவருடன் தமிழ்த் தேசிய இனமும் சம உரிமை பெறவேண்டும் என்றும், இவை பற்றித் தமிழ் நாட்டுச் சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்றும் வலியுறுத்திப் பேசினர். திரு. **சேரன்** நன்றியுரைக்குப்பின் நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

### 4. இலவயத் தனித்தமிழ்ப் பயிற்சி வகுப்பு, குடந்தை :

குடந்தை நகர்க் கிளை உ. த. க. சார்பாக, குடந்தைப் பெரிய மடம் (மணிக் கூண்டுக்கு அருகில்), பாவாணர் செந்தமிழ்ப் பயிற்றகத்தில் ஞாயிறு தோறும் இரவு 7 மணி முதல் 8-30 வரை இலவயத் தனித்தமிழ்ப் பயிற்சி வகுப்பு, குடந்தை வட்ட உ. த. க. அமைப்பாளர், திரு. **கதிர் தமிழ்வாணன்** அவர்களைப் பயிற்றுசிரியராகக் கொண்டு நடத்தப்பெற்று வருகிறது. அங்கு, கடந்த மடங்கல் 10 (26-8-79) ஞாயிறன்று, இரவு 7 மணியளவில், புலவர். திரு. **கதிர் தமிழவாணன்** அவர்கள் தலைமையில், குறள்நெறிச் சிந்தனை மேடை ஒன்று நடைபெற்றது. திரு. **சி அரசிறைவனர்** அறி. இ. நடுவராக இருந்தார். திரு. **பாவலர். கோ.** 'கடவுள் வழுத்து' எனும் பொருளிலும், பாவலர். **திருவை அரசு** 'வான் சிறப்பு' எனும் பொருளிலும், பாவலர். **பூவை. சிவம்** 'விருந்தோம்பல்' எனும் பொருளிலும், புலவர். **மு. கோபால ரமணன்** இல. இ. 'செய்ந்நன்றியறிதல்' எனும் பொருளிலும், பாவலர். **கீதாலயன்** அறி. இ; ச. இ, 'ஆள்வினை யுடைமை' எனும் பொருளிலும், இளம் புலவர் **இரா: தமிழன்பன்** 'மானம்' எனும் பொருளிலும் விளக்கவுரையாற்றினர். திரு. **வை. குணசீலன்** அறி. இ. நன்றியுரையாற்றினர்.

**5. புதுச்சேரி—தமிழ் காவற்குழுவின், பெயர்ப் பலகை தமிழ்ப்படுத்தப் பணி :**

தமிழ் இலக்கிய இயக்கங்களின் கூட்டமைப்பான புதுச்சேரி தமிழ் காவற்குழு, சென்ற 27-7-79 அன்று மாலே 6 மணியளவில், புதுவையைச் சார்ந்த முத்தியால்பேட்டைப் பகுதிக்குச் சென்று, அங்குள்ள வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளைத் தமிழில் மாற்றி எழுதி வைக்குமாறு கூறி, எழுதும் முறையையும் விளக்கி, வேண்டுகோள் துண்டறிக்கையும் வழங்கியது. அதைத் தொடர்ந்து 2-8-79 அன்று பிற்பகல் 3-30 மணியளவில், புதுவை அரசு, தலைமைச் செயலகத்தைச் சார்ந்த பணியாளர், ஆட்சிமுறைச் சீரமைவுத் துறைச் சிறப்பு அலுவலர் (Special officer, personal and Administrative reforms wing) அவர்களை நேரில் கண்டு ஆட்சிமொழித் தொடர்பான அனைத்துப் பணிகளையும் தமிழிலேயே ஆற்றுமாறும் அதற்காக அலுவலர்களை ஊக்குவிக்குமாறும் கேட்டுக் கொண்டது. இச்செயற்பாடுகளில் பல தமிழ் இலக்கிய இயக்கங்கள் கலந்து கொண்டன.

**6: தமிழரசி—தண்டபாணி ஈன்ற பெண் மகவு வாழ்க!**

திருச்சி, பூங்குடி அ. உ. பள்ளித் தமிழாசிரியர், புலவர். **நா. தண்டபாணி** க. இ; இலக். இ. அவர்களின் துணைவியார் **தமிழரசி**, கடந்த ஆடவை 13 (27-6-79) அறிவனன்று, இரவு 8 மணியளவில் பெண் குழந்தை ஒன்றினை ஈன்றெடுத்த இனிய செய்தியை முன்னிட்டுச் **தென்மொழி** வளர்ச்சிக்கு உருபா பத்து நன்கொடை வரப்பெற்றேம். **தமிழரசி தண்டபாணி** ஈன்ற பெண் மகவு பல்லாற்றுனும் நீடுழி வாழ, தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

**7. புலவர். திரு. கா. இளமுருகன் (பு. புளியம்பட்டி) பணி உயர்வு :**

கோவை மாவட்டம் புன்செய்ப் புளியம்பட்டி அரசு மேனிலைப் பள்ளித் தமிழாசிரியர் புலவர் திரு. **கா இளமுருகன்** க. மு; ஆ.ப. அவர்கள். அவர் பணியாற்றும் பள்ளியிலேயே மேனிலைப் பள்ளி தமிழ்த் துறைக்குப் பணி உயர்வு பெற்றதை முன்னிட்டுத் **தென்மொழி** வளர்ச்சிக்கு உருபா இருபத்தைந்து நன்கொடை நல்கியுள்ளார். நெடுநாளையத் தென்மொழி யன்பரும், புரவலரும் ஆகிய திரு. **கா. இளமுருகன்** அவர்கள் மேன்மேலும் பல சிறப்புகள் பெற்றுச் சிறந்துயர எல்லாம் வல்ல இறைப் பேரருள் துணை நிற்குமாக.

தங்களது எழுத்து நடை என்னை மிகவும் கவர்ந்துள்ளது. தனித் தமிழ் மீது எனக்குப் பற்று ஏற்பட்டதற்கு முகாமையான காரணியங்களில் தங்களது எழுத்து நடையும் ஒன்று. வேற்று மொழிச் சொற்களைக் கலந்து எழுதுவதுதான் கவர்ச்சி, அழகு, சிறப்பு என்றெல்லாம் பிதற்றித் திரியும் இழி தமிழர்கள் தங்களது தென்மொழியைப் படித்துப் பார்க்கட்டும்.

தமிழக அரசியல் நிலை மிகவும் வருந்தத்தக்க நிலையிலே இருக்கிறது. தன்மானத் தமிழர்கள் ஆட்சிக்கு வந்து 12 ஆண்டுகள் ஆகியும் இன்னும் தமிழ் தனக்குரிய இடத்தைப் பெறவில்லை என்பதை எண்ணும்போது மிகவும் வருத்தமாகவே இருக்கிறது. கோயிலிலே தமிழன்னை வீற்றிருப்பதாகத் தெரியவில்லை. தமிழ்த் தெருக்களிலே தமிழன்னை நடம்புரிவதாகத் தெரியவில்லை. தமிழ் மனைகளிலே நச்சுப் பெயர்களே ஒலிப்பதாகத் தெரிகிறது. வானொலியிலும் தமிழுக்குரிய இடம் வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை.

தமிழகத் தமிழர்களில் பெருந்தொகையினர் மொழியுணர்வோ, இனவுணர்வோ. தன்மானமோ, பகுத்தறிவோ இல்லாத சோற்றுப் பிண்டங்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது. அரசுக்கு தமிழின் பால் உண்மையான பற்று இருக்குமாயின், தமிழகத்தில் வெளிவரும் எல்லாத் தமிழ் இதழ்களும் பிற சொல் கலவாது தனித் தமிழிலே எழுத வேண்டுமெனறு ஏன் சட்டம் போடக்கூடாது. ஆரிய எதிர்ப்புக் கழகத்தினர் ஆரியச் சொற்களையும் ஆரிய எழுத்துகளையும் வலிந்து, எழுதுவது நகைப்பிற்குரியதாய் அன்றோ உள்ளது? —மூ. **திருவேங்கடம்**, சோகூர்; மலேசியா.

*0:670* : மதுரை திரு. வி. தங்கசாமி (சேர்வை) என்பார் 8-9-79 இந்து' நாளேட்டில், ஆசிரியர்க்கு ஒரு கடிதம் எழுதி உள்ளார். தொழிற்கல்விக்குத் தமிழ் பயிற்றுமொழி கூடாது என்று வலியுறுத்தி எழுதியுள்ளார்.

மதுரைப் பல்கலைக் கழகப் புதிய துணைவேந்தர், செய்தியாளர் கூட்டத்தில் மருத்துவம், பொறியியல் உட்பட எல்லாத் துறைகளின் அனைத்து நிலைகளிலும் தமிழ் பயிற்று மொழியாக்கப்பட வேண்டும், கல்லூரிகளில் தமிழ் வாயிலாகக் கற்று மாணவர்கள் தொழிற்கல்வி பயிலுதற்கு வாய்ப்பாகத் தமிழைப் பயிற்றுமொழியாக ஆக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று கூறியுள்ளார்.

'இக்கருத்தினைப் பற்றிய தம் எண்ணத்தை மதுரை. வி. தங்கசாமி அக்கடிதத்தில் இவ்வாறு எழுதியுள்ளார் :

"கொள்கை அளவில் இந்த நோக்கம் சிறப்பாக இருந்தாலும் தகுதி மிக்க பொறியியல், மருத்துவப் பாட நூற்களை மொழி பெயர்ப்பது சிக்கலான செயல்; மிக அரிய செயல் தமிழில் மொழி பெயர்ப்பு செம்மையாக அமைவது மிக்க கடினம். பொருட்செலவும் மிகுதியாக ஏற்படும். இவ்வாறு கூறுவதால் தமிழின் சிறப்பையும் பழம் புகழையும் குறைத்து மதிப்பதாகாது. ஆங்கிலத்தில் பத்துப் பக்கம் எழுதப்பட்டுள்ள செய்தியைத் தமிழில் தர வேண்டுமானால், 15 பக்கமாகும். இவ்வாறு பெருத்த அளவில் மொழிபெயர்ப்பு அமையும். மாணவர்கள் இவற்றை மனங்கொள்வதும் எளிதன்று. எனவே, அவர்தம் முன்னேற்றம் சிறப்புற அமையாது வரலாறு, நிலவியல் போன்ற பாட நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தல் கடினமானதன்று. அறிவியல் பாடங்களை அவ்வளவு எளிதாக மொழியாக்கம் செய்ய இயலாது. அம்முயற்சி வீண் முயற்சி; பெருங்

குழப்பத்தில் போய் முடியும். அறிவியலின் பல்துறைகளைத் தெளிவாகப் படைக்கவும், புரியச் செய்யவும் முடியாது. ஒருவேளை துணிந்து செயல்பட்டாலும், அது செயற்கையாகவும், பொருந்தாததாகவும் இருக்கும். சான்றுக, கிரே என்பார் எழுதிய உடற்கூற்று நூலை (Anatomy) விளங்கும் தமிழில் எழுத முடியாது. எனவே, அறிவியல், தொழில்துறை நூல்களை விட்டு விடுவதே நல்லது.

'கல்வியின் நோக்கம்' அறிவை மேலோங்கச் செய்வதே; அறிவு வளர்ச்சியைத் தடை செய்வது அன்று' தொழிற்கல்வியைத் தமிழ் வாயிலாகப் பயிற்றுவிப்பது அறிவியலுக்கு முரணானது. எனவே, ஆங்கிலப் பயிற்றுமொழிக்கு இணையாகத் தமிழ்ப் பயிற்றுமொழியைக் கொண்டு வருவது பொருத்தமும் இல்லை; நடைமுறைக்கும் சரிவராது. ஆங்கிலம் நிலையான இடத்தைப் பெற்றுள்ளது. இதை அகற்றும் முயற்சி ஈடுசெய்ய முடியாத விளைவுகளை எதிர்காலத்தில் உருவாக்கும். விண்வெளி—அணு ஆய்வுகள் வளர்ந்து வரும் இக்காலத்தில் குறுகிய மனப்பான்மையால் உறுதியாகத் தீமையே விளையும்' என்பன அவர் கடிதத்தின் கருத்துகள்.

உலகம் முழுவதும் தாய் மொழியிலேயே கல்வி கற்பிக்கப்படுகிறது. தாய்மொழி மூலம் கற்றாலே புரிந்துகொள்ளவும், சிந்திக்கவும், ஆய்வு செய்து அரியன படைக்கவும் முடியுமென்பது தெளிந்த உண்மை. கோத்தாரி கல்விக்குழு தன் பரிந்துரையில், மாநிலங்கள் தம் தாய்மொழி வாயிலாகப் பொறியியல் போன்ற பாடங்களைக் கற்பிக்க முயலல் வேண்டுமெனக் கூறியுள்ளது. அதற்காகத் தகுதி வாய்ந்த பாட நூற்களை மொழி பெயர்க்கவும், இதில் விழிப்பாகவும், மும்முரமாக ஈடுபடவும் அது கூறியுள்ளது. இப்பணியில் மாநில அமைப்புகளையும், தக்காரையும் கலந்து, அவர் துணையுடன் செயலாற்ற வேண்டுகிறது. இப்பணி முடிவடைந்ததும், சில கல்வி நிலையங்களில் இவற்றை நடைமுறைக்குக் கொணர்ந்து, ஏற்படும் சிக்கல், குறை, நிறைகளை ஆய்ந்து—பின்னர் எல்லா நிலையங்கட்கும் தாய்மொழியையே பயிற்று மொழியாக்க வேண்டும் என்று கூறியுள்ளது. எல்லா மாநிலங்களும் தாய்மொழி மூலம் கற்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற கல்விக் குழுவின் பரிந்துரை தமிழ் நாட்டிற்கும் பொருந்துவதுதானே? 10 பக்க ஆங்கிலச் செய்தி 15 பக்கமாக தமிழில் அமையும் என்று அவர் கூறுவது சரியன்று; 10 பக்கச் செய்தியை அதைவிடக் குறைவாகக் கூடத் தமிழில் கூற முடியும். மிகச் சுருக்கமாகச் செய்யுள்கள், நூற்பாக்கள் மூலம் பல நுண்கலைகள் ஏற்கெனவே தமிழில் படைக்கப்பட்டுள்ளன. தமிழ் மருத்துவம் பாடல்கள் மூலம் அமைந்துள்ளமையும் நாம் அறிவோம். மொழி பெயர்க்க முடியாது, விளங்காது—குழப்பமாக இருக்கும்—என்று பலபடச் சொல்வதும் பொருந்தாது. நடைமுறையில் ஏதும் சிக்கல் எழுந்தாலும் போகப் போக அவற்றை நீக்க முடியும். விண்வெளி, அணு ஆய்வு வெற்றிகளைப் போல், இத்துறையிலும் ஏன் வெற்றிபெற முடியாது? மொழி பெயர்ப்புப் பணியை ஆர்வமும், திறமையும் உள்ளவர்களிடமே ஒப்படைக்க வேண்டும்.

(தொடர்ச்சி 7-ஆம் பக்கம்)